1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
{phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

| 81-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1956-ம் ஆண்டு ஆடி மாதம் 19-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 28-ம் இலக்கம் |
|---|---|---|

## சுதேச வர்த்தமானம்

### இரத்தக்களரியின் நடுவில்

பாணந்துறையிலே ஐக்கியதேசியக் கட்சி வாலிபமுன்னணியின் சார்பாக நடைபெற்ற ஓர்பொதுக்கூட்டத்தில் முன்னைநாள் உணவு — கமத்தொழில் மந்திரியாரான திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள் பேசியபோது: சிங்களம்மட்டும் சட்டம் இரத்தக்களரியின் நடுவில் நிறைவேற்றப்பட்டது; ஆனால், அச்சட்டம் நிறைவேறியதும் உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவருவதைக் 'கெசற்' அறிக்கைமூலம் தடைசெய்துவிட்டார் பிரதமர் பண்டாரநாயகா; இந்தச்சட்டத்தினாலே வகுப்புக்கலவரமும், வெறுப்பும் உண்டாக்கப்பட்டன; ஒன்றுமறியாத மக்கள்பலர் கொல்லப்பட்டனர்; சொத்துகளுக்குச் சேதம் ஏற்பட்டது; இந்தச் சட்டத்தினால் ஏற்பட்ட குழப்பநிலை இன்னுமே முற்றுகத் தணியவில்லை; இந்தச்சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதில்லை என்பது பிரதமரின் நோக்கமானால் இந்தச்சம்பவங்களெல்லாம் நடைபெற ஏன் இடமளித்திருக்க வேண்டும்? அவர் தமதுநோக்கத்தை வெளியிட்டிருந்தால் இரத்தக்களரியும், அதிருப்தியும் தவிர்க்கப்பட்டிருக்கும் எனக் கூறலாயினர். அக்கூட்டத்திலே பாணந்துறையின் முன்னைநாள் பாராளுமன்றப் பிரதிநிதியான திரு. டி. சி. டபிள்யு. கன்னங்கரா பேசியவிடத்து, சிங்களம்மட்டும் சட்டத்தினால் மக்கள் ஐக்கியமுன்னணி அரசாங்கம் நாட்டை ஏமாற்றிவிட்டதாகக் கூறினார்.

### புதியகுருமாரின் வரவு

நாம்முன்னர் அறிவித்திருந்தவாறு வண. காஸ்ரன் பி. அல்வீனெஸ் சுவாமியவர்களும், வண. எம். இராயப்பு சுவாமியவர்களும் றோமாபுரியிலிருந்து விக்ரோறியாஎனுங் கப்பலிலே சென்ற செவ்வாய்க்கிழமை கொழும்புவந்து சேர்ந்தார்கள். இவர்களில் வண. காஸ்ரன் பி. அல்வீனெஸ்சுவாமியார் நாளை நின்றுவரும் சனிக்கிழமை காலை 7 மணிக்குத் தமது விசாரணைப்பங்குக் கோவிலாகிய பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே தமது முதற்பூசைப்பலியைநிறைவேற்றுவார். அன்று சாயந்தரம் 5 மணிக்கு அவர் பெற்றோர் யாழ்ப்பாண நகரமண்டபத்திலே ஓர்வரவேற்புஉபசாரம் நடத்துவார்கள்.

### சஞ்சூசையப்பர்பங்தியின் யூபிலிவிழா

யாழ்ப்பாணம், சென்வின்சென்ற் டீபோல்சபை, அர்ச். சூசையப்பர்பந்தியின் 50-ம்வருட யூபிலிவிழா இம்மாதம் 22-ந்திகதியாகிய வருகிறஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவிருக்கிறது. விழாவின் ஆரம்பமாகப் பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே இன்றுமுதல் மாலை 6மணிக்கு முத்தினஆராதனைகள் நடந்தேறும். ஞாயிற்றுக்கிழமைகாலை 7 மணிக்குத் திவ்வியபூசையோடும், பிற்பகல் 4-30 மணிக்கு ஆரம்பமாகும் செபமாலை, வேஸ்பர், திருச்சுரூப சுற்றுப்பிரகாரம், திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்தோடும் யூபிலிவிழா முடிவாகும்.

### வரவேற்பும் முதற்பூசையும்

பாசையூரைத் தமது ஜனனபதியாகக் கொண்டவரும், றோமாபுரியிலிருந்து சென்றசெவ்வாய்க்கிழமை கொழும்பு வந்துசேர்ந்தவருமான வண. எம். இராயப்புசுவாமியவர்களுக்கு வருகிற 27-ந் திகதி வெள்ளிக்கிழமை அவரின் ஜனனபதியிலே பொதுவரவேற்பு நடத்தப்படும். மறுநாள் 28-ந்திகதி சனிக்கிழமை காலை, பாசையூர், அர்ச். அந்தோனியார்கோவிலிலே அவர் பெரிய பாடற்பூசை நிறைவேற்றுவார்.

### கல்லூரி அதிபரின் கருத்து

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி, சென் ஜோண்ஸ் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழா சென்ற வெள்ளிக்கிழமை நடந்தேறியது. அதிலே கல்லூரித் தலைவர் கனம். ஜே. ரி. அருளானந்தம் அவர்கள் தமது அறிக்கையிலே: நமது தமிழ்மொழியை உபயோகிக்கும் உரிமை நம்மிடமிருந்து பறிக்கப்பட்டால் நாம் தமிழர்களாகவோ, அன்றேல் சிங்களவர்களாகவோ கருதப்படாமல் ஓர் இரண்டாந்தரப் பிரசைகளாகவே கருதப்படுவோம்; சட்டமாகிவிட்ட தனிச்சிங்களத்தினால் தமிழ்மக்கள் பீதியும், ஏமாற்றமும் அடைந்திருக்கிறார்கள்; இந்தச்சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதும் இந்நாட்டிலுள்ள தமிழ்இனத்துக்குப் பேராபத்து ஏற்பட்டுவிடும்; அடுத்தபடியாக நமது பாடசாலைகளில் சிங்களத்தைப் போதனமொழியாகக்கொண்டுவர அரசாங்கம் தயங்கமாட்டாது; தங்கள் உரிமைகளுக்காகத் தமிழ்மக்கள் கடைசிவரை போராடத் தீர்மானித்திருப்பது மனநிம்மதியைக் கொடுக்கின்றது; தமிழ்மாணவர்களுக்குச் சிங்களத்திலும் அறிவு இருக்கவேண்டும்என்பதற்காகப் பதினைந்துவருடங்களுக்கு முன்னரே நாம் எமதுபாடசாலைகளில் சிங்களவகுப்புகளைத் தொடக்கிநடத்தினோம்; ஆனால், தனிச்சிங்களசட்டத்தை ஆட்சேபிக்குமுகமாக அந்தவகுப்புகளை நிறுத்திவிட்டிருக்கிறோம்; இப்பிரச்சினைவிஷயமாய் விரைவிலே ஓர்நல்லமுடிபு ஏற்படுமென நம்புகிறோமெனத் தெரிவித்திருக்கிறார்.

### குருமார் நியமனம்

மன்னார்க் கட்டளைக்குரவராய் இருந்துவந்தவரான வண. எஸ். பீற்றர் சுவாமியவர்கள் மானிப்பாய்க் கட்டளைக்குரவராகவும், மானிப்பாய்க் கட்டளைக்குரவராய் இருந்துவந்தவரான வண. ஜி. ரி. பாலசுந்தரம் சுவாமியவர்கள் மன்னார்க்கட்டளைக் குரவராகவும் நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார்கள்.

### சிங்களப்பாஷை எதிர்ப்புத்திட்டம்

அரசாங்கத்தின் சிங்களமொழிக் கொள்கை நடைமுறைக்குவருவதை எதிர்த்துத் தமிழ்மொழியைப் பாதுகாத்துவைப்பதற்காகத் தமிழ்மக்கள் அனைவரும் கையாளவேண்டிய நான்கு அம்சத் திட்டம்ஒன்றை யாழ்ப்பாணப் பிரதிநிதியான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்அவர்கள் காரைநகரிலே சென்ற 17-ந்திகதியன்று நடைபெற்ற பொதுக்கூட்டம்ஒன்றில் பின்வருமாறு வெளியிட்டிருக்கின்றார். (1) சிங்களத்தில் எழுதப்பட்டகடிதங்களை ஏற்றுக்கொள்ளக்கூடாது. தமிழரின் தேவைகளைக்கோரி எழுதப்படும் எந்தக்கடிதத்திற்கும் தமிழிலேயே விலாசம்எழுதுதல்வேண்டும். (2) தங்கள்பிள்ளைகளுக்குச் சிங்களம்கற்பிக்கத் தமிழ்ப் பெற்றோர் சம்மதம்அளிக்கக்கூடாது. (3) அரசாங்கசேவையிலுள்ள உத்தியோகஸ்தர்கள் சிங்களம்படிக்கச் சம்மதிக்கக்கூடாது. (4) தலதாபனங்கள் சிங்களத்தில் எழுதப் பெற்றகடிதங்களைக்கையேற்கமறுப்பதோடு, தலதாபனகம்மிஷனருக்கோ, மந்திரிமாருக்கோ தமிழிலேயே கடிதம்எழுதவேண்டும்.

### உத்தியோக பாஷைப்பகுதி

தற்போது திறைசேரித்தலைவராயும், நிதிமந்திரிகாரியாலய நிரந்தரகாரியதரிசியாயும் இருந்துவருகிறவரான திரு. எல். ஜே. டி எஸ். செனிவிரத்ன அவர்கள் அரசாங்க உத்தியோகபாஷைப் புதியபகுதியின் தலைவராக நியமனஞ்செய்யப்பட்டிருக்கின்றார். இந்தநியமனம் வருகிறஆவணி மாதம் 1-ந்திகதியன்று நடைமுறைக்கு வந்து நான்குவருடங்களுக்கு— அதாவது 1960-ம்ஆண்டுவரை நீடித்திருக்கும். இது பிரதமரின் நேரடியான கண்காணிப்பில்இருந்துவரும். இலங்கையிலே ஒரேயொரு உத்தியோகபாஷையாகச்சிங்களத்துக்கு எல்லாவற்றையும் மாற்றியமைக்கும் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவருவதில் இதுதான் உத்தரவாதமுடையதாய் இருந்துவரும்.

### ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கும் தாய் எங்கள்

### சதாசகாயமாதா

யான் ஓர்வறிய குடும்பத்திற்பிறந்து, எனதுசீவியத்தை மிகவுங்கஷ்டமாக நடத்திவரும்போது சதாசகாயமாதாவின் அருளால் நடைபெற்றுவரும் புதுமைகள் பலவற்றையும் கேள்விப்பட்டேன். என்றாலும், முதலில் யான் பெரிதும் அசட்டையாக இருந்தேன். சிறிதுகாலஞ்சென்றதும பல கவலைகளும் என்னை வாட்டத்தொடங்கியவுடனே சதாசகாய மாதாவைச் சரணடைந்தேன். அவவில் முழுநம்பிக்கையும் வைத்தேன். அவவும் என்னைக் கைவிடாமல் காப்பாற்றினா. எவ்விதம் காப்பாற்றினா? பின்வருமாறு:

நான் படிப்பில் மிகவுங்குறைவாக இருந்தேன். பரீட்சைத்தினமும் கிட்டியது. அதற்குப் போவதற்கோ எனக்குத் தகுதியில்லை. என் செய்வேன்? வீட்டுக்கஷ்டம் ஒருபக்கம், படிப்பிற்கட்டை மறுபக்கம். இவற்றைத்தாங்கமுடியாது தவித்துக்கொண்டிருந்தவேளை சதாசகாயமாதாவின் நோவனைப் பக்திமுயற்சிகளுக்கு மக்கள் கூட்டம் கூட்டமாகச் செல்வதைப் பார்த்தபோது எனக்கும்மனதில் ஓர் சிறுஉற்சாகம் பிறந்தது. அன்னையிடம் சென்றால் அவ என்னையும் கைவிடமாட்டா என்றநம்பிக்கை என்மனதில் எழுந்தது. உடனே அன்னையிடஞ் சென்று எனது குறைபாடுகளை எடுத்துக்கூறினேன். அதன்மேல் என்ன ஆச்சரியம்! படிப்பில்எனக்கு ஓர்வித உற்சாகம் ஏற்பட்டது. பரீட்சைக்கு விடமுடியாதென்று ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த நான் அன்னையின் உதவியால் பரீட்சைக்கு விடப்பட்டேன். அப்பரீட்சையில்வந்த வினாப்பத்திரங்கள் எல்லாவற்றிற்கும் தக்கவிடைகள் அளித்தேன். ஈற்றில், அம்முறை பரீட்சைக்குச் சென்ற பன்னிருமாணவர்களில் சித்தியடைந்தவன் நான்ஒருவனேயன்றி வேறெவரும்இல்லை.

அப்போது எல்லோராலும் இகழப்பட்டுவந்தநான் இப்போது எல்லோராலும் புகழப்படுவதற்கான அருளைப் புரிந்தவ சதாசகாயமாதாவேயன்றி வேறெவருமன்று. இப்போது நான் அவவிலே முன்னிலும் அதிகம்கூடுதலான நம்பிக்கையும், அன்பும் உள்ளவனாயிருக்கிறேன். அத்தோடு நான் எனது அன்பானசதாசகாயமாதாவுக்கு மாணபரியந்தம் கடமைப்பட்டவனுமிருக்கிறேன்.

— ஓர் பக்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினோராம் பத்திநாதரும் ஆசிரியர்களும்

கத்தோலிக்க ஆசிரியர்கள்மட்டில் காலஞ்சென்ற 11-ம் பத்திநாத பாப்பானவர் எவ்வளவோ மதிப்பும், கரிசனையுமுடையவராய் இருந்துவந்தார். அவர் 1930-ம் ஆண்டின் புரட்டாசி மாதத்தில் ஓர்நாள் தம்மைப் பேட்டி காணவந்த ஓர் பெருந்தொகையான ஆசிரியர்களை நோக்கிப் பேசியபோது: ஆசிரியர்கள் ஆற்றிவருகின்ற உன்னத ஊழியம் அப்போஸ்தலிக்க ஊழியத்துக்கு இணையானதென்றும், "உலகம் எங்கும்போய்ப் படிப்பியுங்கள்" என்று அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்த கட்டளையில் சகலகத்தோலிக்க ஆசிரியர்களும் பங்குபற்றுகிறவர்களென்றும் தெரிவித்து, ஆசிரியர்களின் பதவி எத்துணை மகத்தானதென்பதைப் பின்வருமாறு விளக்கிக்கூறினார்.



"நமது ஞானப் புத்திரர்களுள் எவர்தான் நம்மைச் சந்திக்கவரினும் அதுநமக்குப் பேரானந்தம் விளைவிக்கும் என்பதை நாம் அழுத்திக்கூற வேண்டியதில்லை. ஆனால், கத்தோலிக்க ஆசிரியர்கள் நம்மைச் சந்திக்கவருவது நமக்கு விசேஷ இன்பம் உண்டுபண்ணுவதாகின்றது. ஏனெனில், நாம் குருப்பட்டம்பெற ஆயத்தஞ் செய்துகொண்டிருந்த காலத்திலே சிலகாலம் சிறுவர்களுக்குக் கல்விகற்பிக்கும் ஒருஆசிரியராகவே இருந்துவந்தோம். ஒருஆரம்ப பாடசாலையில் நான்காம்வகுப்பு முழுவதையும் நமது பொறுப்பிலேற்றுப் பாடசாலை அதிகாரிகளால் விதிக்கப்பட்ட முறைப்படி அவ்வகுப்புக்குரிய சகல பாடங்களையும் கற்பித்துவந்தோம்.

"உங்கள் சந்திப்பினால் நாம் சந்தோஷங் கொள்வதற்குள்ள பிரதான நியாயம் இதுவல்ல. இதிலும் மேலான ஒரு நியாயம் உண்டு. அது என்னவானால், ஆசிரியர் என்னும் நாமமானது யேசுக்கிறீஸ்துநாதர் இந்த உலகில் ஸ்தாபித்துள்ள மதித்தற்கரிய அப்போஸ்தலிக்கஊழியத்தை நினைவூட்டுவதே அந்தமேலான நியாயமாகும். ஆசிரியர்என்னப்பட்ட ஒருவனின் மகிமையும், பெருமையும், சிலாக்கியங்களும அந்தஆசிரியர் யேசுநாதர்செய்த மகத்தானஊழியத்தைத் தொடர்ந்து செய்துவருவதிலே அடங்குவதாகும். மனுக்குலத்தவர்களின் சரித்திரத்தில் ஒருபோதும் மறக்கவொண்ணாத மகத்தான நாள் — "நீங்கள் போய்ச் சகல சாதிகளுக்கும் போதியுங்கள்" என்று அப்போஸ்தலர்களுக்கு அவர் கட்டளையிட்டநாளேயாகும். ஆசிரியர்களாகிய நீங்களும இந்தக்கற்பனையையே நிறைவேற்றிவருகின்றீர்கள். விசேஷமாகக் கத்தோலிக்க ஆசிரியர்களாகிய நீங்கள் உள்ளபடியே ஆசிரியர்களாகவிருப்பின் நிறைவேற்றவேண்டிய கடமை, "உலகம் எங்குமசென்று போதியுங்கள்" என்று ஆண்டவர்சொல்லிய கட்டளையில் அடங்கியுள்ள கடமையல்லாது வேறொன்றுமில்லை. நீங்கள் உங்கள் மேற்றிராணிமார், விசாரணைக்குருமாரினால் பாடசாலைகளிற் படிப்பிக்குமபடி அனுப்பப்படும்பொழுது அப்போஸ்தலரின் செவிகளில்ஒலித்த தேவதொனிகளே உங்கள்செவிகளிலும் ஒலித்திருக்கின்றன என்பதை மறந்துவிடாதிருங்கள். அப்போஸ்தலரின் செவிகளில் தேவகுமாரனுடையஒலி நேரே ஒலிப்பதாயிற்று. உங்கள்செவிகளில் அத்தேதொனியானது அவரின் அதிகாரம் பெற்றவர்கள்மூலமாக ஒலிப்பதாயிற்று. பிரியமக்களே! கத்தோலிக்க ஆசிரியராகவிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லப்பட்ட கட்டளையானது தெய்வீகஉற்பத்தி உடையதென்பதை எப்போதும் நினைத்துக்கொள்ளுங்கள்.

"கத்தோலிக்ககுடும்பங்கள் தங்கள் பிள்ளைகளை உங்களிடம்ஒப்படைக்கும் பொழுது நீங்கள்ஒவ்வொருவரும் தங்கள்குடும்பங்களைச் சேர்ந்தவர்களென்ற விசுவாசத்துடனேயே உங்களிடம் தங்கள் பிள்ளைகளை ஒப்படைக்கின்றன. பெற்றோர் உலககவலைகள், கஷ்டங்கள், சந்ததிகள்மத்தியில் தங்கள்பிள்ளைகளைத் தாங்களேபடிப்பிக்க இயலாதவர்கள். ஆதலால், தாங்கள்செய்ய வேண்டியவைகளை நீங்கள் செய்யவேண்டுமென்று கேட்கின்றார்கள். எனவே, பிள்ளைகளுக்குப் படிப்பிக்கும்பொழுது நீங்கள் பெற்றோரின் இடத்தை வகிக்கின்றீர்கள். பெற்றோரின் இடத்தை வகிப்பதால் நீங்களும பெற்றோரின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகிறீர்கள்.

"நீங்கள் குடும்பங்களுக்குச் சேர்ந்ததுபோலவே ஒரு தேசத்துக்கும், இராசியத்துக்கும் விசேஷமாகச் சேர்ந்தவர்களாகிறீர்கள் உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகள்எல்லாரும் உத்தம தேசாபிமானமுள்ள பிரசைகள் ஆகவேண்டுமென்பதே அரசினரின் நோக்கம் தாங்கள் நேரிற்செய்ய இயலாததை அரசினர் நீங்கள்செய்ய வேண்டுமென்றுகேட்கின்றார்கள். ஆதலால், ஆசிரியராயிருங்கள்என்றகட்டளை உங்களுக்குக் கொடுக்கப்பட்டபொழுது நீங்கள் தேவனால் அனுப்பப்பட்டவர்களும், குடும்பங்களால் அனுப்பப்பட்டவர்களும், அரசின[illegible]

வர்களும்என்பதை மனதிலிருத்தி இவ்வித மகத்துவத்துக்கிணங்க உங்கள்கடமைகளைப் பூரணமாய்ச் செய்துவாருங்கள்.

"ஆசிரியராயிருங்கள்" என உங்களுக்குச் சொல்லப்பட்டபொழுது திருச்சபையின் குரலொலியும் உங்கள் செவிகளிற் சப்திக்கிறதென்பதை உணருங்கள். உண்மையின் தாயும், அதன் அஸ்திவாரமும், தாபரமுமாயிருக்கிற திருச்சபை நீங்கள் ஆசிரியராய் இருக்கும்படி உங்கள் செவிகளில் ஓதும்பொழுது, அதைப்போலவே நீங்களும் எப்போதும் உண்மையைப் போதிப்பதில் கரிசனைகொள்ள வேண்டுமென்பதை நினைவுகூருங்கள்" என்பன.

# கடன்கொண்டார் நெஞ்சம்...

கடன்வாங்கும் பழக்கத்தினின்று எவ்வாறு தப்புவது? ஒவ்வொருவரும் சாதாரணமாக வருவாய்க்குமிஞ்சிச் செலவுசெய்யாமல் இல்லறத்தை நல்லறமாய் நடத்தவேண்டும். தினசரிஏற்படும் செலவுகளைத் தினசரிகுறித்து வைத்திருந்தால் அதுபிற்காலத்தில் நன்மைபயக்கும். ஒழுங்கானமுறையில் திட்டம்போட்டுச் செலவுசெய்பவனுக்குத்தான் தானதருமங்கள் செய்வதற்குத் தனதுசெலவுபோக மிகுதிஏற்படும் ஆனால், வீணசெலவு செய்பவனுக்கு ஒருபோதும் மீதிஏற்படாது. அறம்முதலிய நற்காரியங்கள் செய்யவும்முடியாது. இல்லறவாழ்க்கையை இனிதுநடத்தவும் தோன்றாது. தனது வாணாளை வீணாளாகக்கழிக்க நேரிடும்.

முன்பு கடன்வாங்கியஒருவர் வாங்கியகடனைச் செலுத்தாவிட்டால், கடன்கொடுத்தவனுக்கு அடிமையாதலே பெருவழக்கமாம். ஆனால், இக்காலத்திலோ கடன்வாங்கியவன் எந்த நிலைமையில் இருக்கிறான் என்பதை விளக்கத்தேவையில்லை. ஒருகடனை ஒழிக்க மற்றொருகடன். முன்வாங்கிய கடனைக்காட்டிலும் அதிகவட்டிக்கு வாங்குகின்றான். கடன்கொண்டவனதுநெஞ்சம் எப்போதும் கலக்கத்தையே உண்டுபண்ணும். கடன்கொடுத்தவனைக் கண்டபோதெல்லாம் அவனுக்குமனம் திக்கிட்டுக்கொண்டிருக்கும்.

"விடங்கொண்ட மீனைப்போலும்
வெந்தழல் மெழுகுபோலும்
படங்கொண்ட பாந்தள்வாயிற்
பற்றியதேரை போலும்
திடங்கொண்ட ராமபாணம்
செருக்களத் துற்றபோது
கடன்கொண்டார் நெஞ்சம்போலும்
கலங்கினான் இலங்கைவேந்தன்"

என்ற ஓர்செய்யுளும் வழங்கிவருகிறது.

ஒருஅறிஞர் வகுப்புநடத்தும்பொழுது, "கடன்கொண்டார்நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்பதைக் "கடன்கொடுத்தார் நெஞ்சம்போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்று மாற்றிஅமைத்து நகைச்சுவையுடன் இந்தக்காலத்துக்கு ஏற்ப உரைசொன்னார். மற்றோர் அறிஞர் இதைக்கேட்டு நையாண்டிக்காக இப்படி மாற்றிஅமைக்கலாம்; இந்தக்காலத்திலும் நல்லெண்ணமுடையவன் கடன்பட்டால் இலங்கை வேந்தனைப்போலத்தான் அல்லற்படுகிறான் என்றார்.

கடன்கொடுத்து வியாபாரம்செய்யும் வியாபாரிக்கு எவ்வளவோ அனுபவம் இருந்தும் அவன் ஏமாற்றமடைவது உண்டு. கடன்அதிகமாகக் கொடுப்பதால் வியாபாரம்நடக்குமென்று வியாபாரிகள் சிலர்சொல்வார்கள். இந்தக் காலத்தில் சிலர்கடனவாங்கி ஏமாற்ற வேண்டுமென்றே திட்டம்போட்டுக் கொண்டு வியாபாரியிடம் போவார்கள். ஏமாற்றவேண்டுமென்ற திட்டத்தோடு வருகிறவர்களிடம் வியாபாரிவிழிப்பாயிருக்கவேண்டும். கடன்கொடுத்து வாங்கும் வியாபாரி கடன்கொடுக்கும் பொழுது அறிவைத் தக்கமுறையில் பயன்படுத்தவேண்டும். வியாபாரி பலமுறைநடந்ததால் கடனைக்கொடுப்பது, இல்லையேல் ஏமாற்றுவது, மறுமுறையும கடன்கொடுத்தால்தான ஏற்கனவேவாங்கிய கடனைத்தீர்ப்பது— என்று கடன்வாங்கவருவோரில் பலரகம்உண்டு. கடன்கொடுக்கும் பொழுது கடன்வாங்குபவரின் சூழ்நிலையைப்பார்த்துக் கடன்கொடுக்க வேண்டும். அவர்குடும்பத்தில் எத்தனை பேர், அவரின் வருவாய் என்ன? அவருடைய நண்பர்கள் — பொருளாதாரநிலைமுதலியவைகளை நன்கறிந்த அவருடைய அன்பர்கள்வாயிலாக விசாரித்த பின்னரே கடன்கொடுக்கவேண்டும். நல்லவர்களாய் இருக்குமசிலர் சூழ்நிலை காரணமாக மாறிவிடுவதுண்டு. ஆதலால், கடன்கொடுக்கும் பொழுதெல்லாம் கடன்வாங்குபவரிடம் கவனமாக இருப்பது நல்லது. பிரபலவியாபாரிகளிற் பலர் பலசங்கங்களில் அங்கத்தினர்களாக இருப்பார்கள். சங்கங்களில் இருக்கும் அங்கத்தினர்கள் மூலமாக அடிக்கடி விசாரிப்பதற்காகவே பெரும்பாலானவர்கள் சங்கங்களில் தொடர்பு வைத்துக் கொண்டிருப்பார்கள்.

பெரியபட்டணங்களில் ஆடவர்களை விடப் பெண்கள்தான் அதிகமாகக் கடன்வாங்குகிறார்கள். ஒவ்வொரு குடும்பத்திலும் இராச்சியத்தைப் பெண்கள்தான் நடத்துகிறார்கள். கணவன் சம்பளம்பெற்றதும் மனைவியிடம் கொடுத்துவிடுகிற முறை பலரிடம் உண்டு.

கணவனுக்குத் தெரியாமல் மனைவியும், மனைவிக்குத் தெரியாமல் கணவனும் கடன்வாங்குவது உண்டு. கடனை வசூல் செய்வோரில் பெரும்பாலோர் கணவன் அலுவலகம்சென்றபின் வசூல் செய்யப்போவார்கள். சில நாட்களில் அவர் திடீரென்று அலுவலகம் செல்லாமல் விடுமுறை எடுத்துக்கொண்டு வீட்டில் இருப்பார். இது தெரியாமல் கடனை வசூலிப்பவர் அம்மையாரின் வீட்டுக்குச்சென்றால் கணவனுக்கும், மனைவிக்கும் பெரும்போர் நடக்கும். நல்லபண்பாடுள்ள மனைவிக்குத்தெரியாமல் கணவன்கடன்வாங்கியது தெரிந்ததும் மனைவியும், கணவனும் போராடுவதுண்டு.

பெரும்பொருள் சம்பாதிக்கும் சினிமா நடிகர், நடிகைகள் உடலை உதறிச் செல்லும்பொழுது பெருங்கடன்சுமையை வைத்துவிட்டே செல்லுகிறார்கள். பெரும்பொருள் கிடைக்கும்பொழுது அதைச் சிக்கனமான முறையில் செலவு செய்யப் பலரும் கற்றுக்கொள்ள வேண்டுமென்பது என்னுடைய ஆசை.

இக்காலத்திலே நீதிமன்றத்துக்குச் சென்று கடனைவசூலிப்பது கடினம் என்பது பலருக்குந்தெரியும். முக்காலணா கடனுக்காகச் சென்றமாதம்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### ரோமைநகரின் புதியகோவில்

உலகமுழுவதிலுமுள்ள கத்தோலிக்க தொழிலாளர்களின் தூதுக்குழுஒன்று சமீபத்திலே வத்திக்கான்மாளிகைசென்று தொழிலாளியான கிறீஸ்துநாதரின் பெரிய வெண்கலச்சுரூபம்ஒன்றைப் பாப்பரசருக்கு அன்பளிப்புச் செய்ததல்லவா? இந்தச் சுரூபத்தை ஸ்தாபிப்பதற்கென ரோமை நகரில் ஓர்புதியகோவில் கட்டப்படவிருக்கிறது. பரிசுத்தபிதாவின் 80-வது பிறந்தபெருநாள் அன்பளிப்பாக உலகிலுள்ள தொழிலாளர்களே இச்சுரூபத்தைச் செய்வித்துக் கொடுத்தார்கள். கனடா, இத்தாலி, தென்வியெற்னும், பிரான்சிய மேற்குஆபிரிக்கா முதலாம் நாடுகளிலிருந்துபோன தொழிலாளர்களையும் அடக்கிய இந்தத் தூதுக்குழுவானது வத்திக்கான் மாளிகையிலுள்ள சிம்மாசன அறைசென்று பாப்பரசரைப்பேட்டிகண்டு அவருக்கு இந்தச்சுரூபத்தை அன்பளிப்புச்செய்தது.

### நூறுபுதுமைகளின் பாப்பானவர்

11-ம் இன்னொசெந் பாப்பானவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளுதற்கென்று நடத்தப்பட்டவிசாரணையிலே அவருடைய சலுகையால் நடந்தேறியனவாய் ஏறக்குறைய நூறுஅற்புதஆரோக்கியங்கள் சமர்ப்பிக்கப்பட்டதாகத் திருச்சடங்காசார திருச்சங்கம் தெரிவித்திருக்கின்றது. ஆனால், இந்த அற்புதங்களில் இரண்டுமாத்திரம் விசாரணைசெய்து அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுள் ஒன்றில் தொமினிக்கன் சபையைச்சேர்ந்த ஓர்கன்னியாஸ்திரி குணமடைந்தார். மற்றதிலே 17-ம் நூற்றாண்டில் வசித்திருந்த சாதாரண கத்தோலிக்கர்ஒருவர் குணமடைந்தார். இவைகள் சம்பந்தமாய் 11-ம் இன்னொசெந் பாப்பானவரின் சொந்தடக்றரே சாட்சியங்கள் அளித்திருக்கின்றார். இந்தப் பாப்பானவர் வருகிறஐப்பசிமாதம் 17-ந்திகதியன்று முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்படவிருக்கின்றார்.

### குருதந்தையும் குருபுதல்வரும்

ஐக்கிய அமெரிக்கதேச அயோவாநாட்டினைச்சேர்ந்த டுபூக்நகரிலே சமீபத்தில் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்ற வண. சாள்ஸ் நோட்ரன்சுவாமியார் ஓர் குருவானவரின் புதல்வரும், ஓர்குருவானவரின் சகோதரருமாவர். இவர்தந்தையரான வண. பற்றிக் நோட்ரன் சுவாமியார் 1952-ம் ஆண்டு — அதாவது, தம்முடைய பாரியார்மரித்து ஏழு வருடங்களின்பின் ரோமாபுரியில் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றார். புதிய குருவரின் சகோதரரான வண. குளோட் நோட்ரன்சுவாமியார் அங்கு ஹாம்ரன்நகரில் ஓர் விசாரணைப்பங்குக் குருவராய் இருந்துவருகின்றார். அங்கு அர்ச். இரபயேலின் ஆசனக்கோவிலிலே இவர் தமதுமுதற்பாடற்பூசையை நிறைவேற்றியபோது அவர் தந்தையாரும், சகோதரருமே உதவிசெய்தார்கள்.

### மற்றுமோர் பாதிரியார்

இங்கிலாந்திலே சமீபகாலம்வரை ஹூட்ரன்நகர் சென்சேவியர் அங்கிளிக்கன்சபைக் கோவில் பாதிரியாராயிருந்துவந்த கனம். றிச்சேட் ஜோண்சன் அவர்கள் மனந்திரும்பி அன்றுஞாயிற்றுக்கிழமை லண்டன் நகரிலே பாம் வீதியிலுள்ள யேசுசபைக் கோவிலில் வண. ஏ. ஏ. ஸ்ரிபென்சன் சுவாமியாரால் கத்தோலிக்க திருச்சபையில் சேர்த்துக்கொள்ளப் பெற்றிருக்கின்றார். இனிமேல் இங்கிலாந்துச்சபையில் அதிகாரபதவி வகித்திருக்கமுடியாதெனத் தாம் உணர்ந்துகொண்டதாகவும், ஓர் அங்கிளிக்கனாகவே நிலைத்திருப்பதா, அன்றேல் ஓர் கத்தோலிக்கனாவதா என்பதை விரைவிலே தாம் முடிவுசெய்ய வேண்டியிருப்பதாகவும் இம்மாதத்தொடக்கத்திலே கனம். ஜோண்சன் அவர்கள் தெரிவித்திருந்தார். தென்னிந்தியாவில் சபைஐக்கியவிஷயமாய் அங்கிளிக்கன் சபை செய்துள்ள திட்டமானது அதன் அடிப்படைத் தத்துவங்களையே பாதிப்பதாயிருப்பதே இவரும் அச்சபையிலிருந்து விலகிக் கத்தோலிக்கதிருச்சபையில் சேர்ந்துகொள்ளக் காரணமாகும்.

### ஆஸ்பத்திரியின் அதிர்ஷ்டம்

இங்கிலாந்திலே பிரக்யாதிபெற்ற கிறிக்கெற் விளையாட்டுமைதானம் 'லோட்ஸ்'என அறியப்படுகிறது. இதற்குஅணித்தாகத்தான் "அர்ச். அருளப்பர் — அர்ச். எலிசபேத்தம்மாள் ஆஸ்பத்திரி" இருந்துவருகிறது. இந்தப்பிரஸ்தாப விளையாட்டுமைதானத்தில் விளையாடும்போது காயமடைகின்ற கிறிக்கெற் விளையாட்டுக்காரர் எவருக்கும் இந்தஆஸ்பத்திரியே சமயோசிதமாகச் சிகிச்சையளிக்கின்றது. இங்கிலாந்துக்கும், ஆஸ்திரேலியாவிற்குமிடையே சமீபத்தில்நடைபெற்ற இரண்டாவது கிறிக்கெற்போட்டி விளையாட்டில் இங்கிலாந்தின் கிறிக்கெற்கோஷ்டி இந்தப் போட்டி விளையாட்டில் எடுக்கும் ஒவ்வோர் ஓட்டத்திற்கும் ஒவ்வோர் பவுண் இந்தஆஸ்பத்திரிக்கு உதவுவதாகத் தமது பெயர்வெளியிடாத கிறிக்கெற் அபிமானிஒருவர் வாக்களித்திருந்தார். அதனால், இந்த ஆஸ்பத்திரிக் கன்னியாஸ்திரிமாரும், நோயாளிகளும், நண்பர்களும்சேர்ந்து இங்கிலாந்துக் கோஷ்டி அதிகஓட்டங்கள் எடுக்கத்தக்கதாய் மிகுந்தபக்திவேகத்துடன் மன்றாடினார்கள். விளையாட்டிலே பிரமிக்கத்தக்க சம்பவங்கள் இங்கிலாந்துக்கோஷ்டியின்சார்பாக நடந்தேறின. ஈற்றில் அது 899 ஓட்டங்கள் எடுத்து வெற்றியீட்டியது. விளையாட்டுமுடிந்ததும் எம். எம். சி. என அறியப்படுகின்ற இந்தஇங்கிலாந்துக்கோஷ்டியின் தலைவரான ரியூனிஸின் அலெக்சான்டர்பிரபு முன்சொன்ன ஆஸ்பத்திரிக்கு நேரேசென்று 899 பவுண்பெறுமதியான 'செக்'ஒன்றை வழங்கிப் போயினர்.

### தனது சொந்தக் குருமாராலே

"16-ம், 17-ம் நூற்றாண்டுகளிலே இங்கிலாந்தில் சத்தியவேத விசுவாசத்தைக் காப்பாற்றியவர்கள் பிறநாடுகளிலிருந்துவந்த மிஷனரிமார்அல்ல, ஆனால், சுதேச குருமாரே; அதேவிதமாகச் சீனாவிலும்சத்தியவேதவிசுவாசம் அத்தேச சுதேசகுருமாராலே பாதுகாத்து வைக்கப்படும்" என்று இங்கிலாந்திலே வேதபோதகநாடுகளுக்கு உதவிசெய்கின்ற பாப்பரசரது சபைகளின் தேசியதலைவரான வண. எஸ். எம். ஷோசுவாமியார் சமீபத்திலே அச்சபைகளின் வருடாந்தகூட்டத்தில் பேசியிருக்கின்றார். அதனால் சுதேச குருமாரைப் பயிற்றுதற்கென இருந்துவருகின்ற அப்போஸ்தலரான அர்ச். இராயப்பர் சபை வேலைகளை விருத்திசெய்யத்தக்கதாய் உதவிபுரியுமாறு கேட்டுக்கொண்டார். விசுவாசப்பரப்புதற் சபையானது கோவில்கள், பாடசாலைகள் கட்டுவதற்கென்று இப்போது சேகரிப்பதுபோல் நூறுமடங்குபணத்தைச் சேகரிக்கலாமென்றும் சுவாமியார்குறிப்பிடலாயினர்.

### சைபீரிய தொழில்முகாங்கள்

தற்போது ருஷியாவிலே கம்யூனிஸ்தர்கள் நோய்கண்ட சிறைக்கைதிகளை வைத்தியஞ்செய்து அதிகம்நன்றாகப் பராமரிக்கிறார்கள்; ஏனெனில், அவர்களைக் கொண்டு திரும்பவும் கட்டாய வேலை வாங்கலாமென்பதினால் தான்என்று சைபீரியாவிலுள்ள தொழில்முகாம் ஒன்றிலே ஒன்பது வருடகாலம்இருந்து பெருங்கஷ்டப்பட்டுவிட்டுச் சமீபத்தில் பரீஸ்நகர்போய்ச்சேர்ந்த வண. மைக்கேல் புச்கோ சுவாமியார் கூறியிருக்கின்றார். இவர் யூகோசிலேவியாவிலுள்ள பாச்காஎன்ற தமது சொந்தநகரிலிருந்து 1945-ம் ஆண்டு சைபீரியாவுக்கு நாடுகடத்தப்பெற்றுக் கடூரஊழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். 1954-ம்ஆண்டு இவர் விடுதலையடைந்தபோதிலும் இவர் திரும்பவும் தமதுசொந்த நகருக்குச்செல்ல யூகோசிலேவிய கம்யூனிஸ்தர்கள் அனுமதிக்கவில்லை. அதனால் பிரான்சியஸ்தானிகராலயம் பரீஸ்நகர்செல்ல ஒழுங்குசெய்கிறவரை இவர் மஸ்கோநகரிலேயே தங்கியிருந்தார். "சோவியற் அரசு பெருங்கூட்டமாக அடைத்துவைத்திருக்கும் சிறைமுகாங்களிலுள்ளகைதிகளில் நூற்றுக்கு 60 விகிதமானோர் உக்றேனியர்களே; 1944-ம் ஆண்டுமுதல் 1946-ம் ஆண்டுவரை அவர்களில் அநேகர் இறந்துபட்டுப் போயினர்; இந்தமரணவிகிதம் இப்போது குறைந்துபோயிருக்கிறது; ஏனெனில், அவர்களைச் சோவியற்அதிகாரிகள் அதிகம் நன்றாகப் பராமரித்து வருவதேயாகும்; இதற்குக்காரணம், சம்பளமில்லாத தொழிலாளர்கள் கெட்டுநொந்து இறந்துபடுவதானது சோவியற் உற்பத்திப்பொருட்களைக் குறைவுபடுத்துவதேயாகுமென அவர்கள் கண்டுகொண்டமையே" என்று சுவாமியார் தெரிவித்திருக்கின்றார்.

### பாதிரியார்கண்ட உண்மை

இங்கிலாந்திலே அங்கிளிக்கன் சபையைச்சேர்ந்த நியூகசில்மேற்றிராசன மகாநாட்டில் வால்சென்ட்நகரின் தலைமைப்பாதிரியாரான கனன். சி. டி. டபிள்யு. டேவிஸ்அவர்கள் பேசியபோது குறிப்பிட்டது வருமாறு: "ரோமான் கத்தோலிக்கரின் மாதிரிகையை நாம் கண்டுபாவியாதது என்ன ஓர்பரிதாபம்! அவர்கள் தங்கள் கோவிற்பாடசாலைகளைக் காட்டிலும் அழகான புதிய கோவில்களைக் கட்டுவதில் குறைவாகவே தங்கள்கவனத்தைச் செலுத்தியிருக்கிறார்கள். அப்படியான பாடசாலைகளை நான் பார்த்திருக்கிறேன். அங்கு பாடசாலைகளிலிருந்து பலிபீடமானது எல்லைமறைப்பு ஒன்றால் வேறாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதனால் வேண்டும்போது பிள்ளைகளும், ஆசிரியர்களும் ஒன்றுசேர்ந்து ஒரு கூட்டமாய் ஒருங்கேசெபிக்கமுடியும். எனது வால்சென்ட் நகரிலேயே ரோமான் கத்தோலிக்க திருச்சபையின் வளர்ச்சியை — மனதைப் புண்படுத்துவதான வளர்ச்சியை நானே நேரில்கண்டறிந்திருக்கிறேன். 200 வருடங்களின்முன் அங்கு இருபாப்பியர்கள் — பாப்புவின் சமயத்தவர்கள் இருந்தார்கள். ஆனால், இன்றோ ஏறக்குறைய 2,000 கத்தோலிக்க பிள்ளைகள் தங்கள் கோவிற்பாடசாலைகளில் படித்துவருகின்றார்கள். அதனால் இத்தேசத்திலே இடங்கோலிக்கொண்டுவருகின்ற கிறீஸ்துவசபையின் இத்தாலிய (ரோமான் கத்தோலிக்க) பகுதியினரின் கபடதந்திரமான செல்வாக்கைத் தடுத்துவைக்க நாம் விரும்பினால் எமது சபைக்கோவிற் பாடசாலைகளின் இன்றியமையாத முக்கியத்துவத்தை நாம் உய்த்துணரவேண்டும்" என்பதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடி மாதம்

**பொதுக்கருத்து:** உடற்பயிற்சி விளையாட்டுகள் கிறீஸ்துவநெறிப்படி நடைபெற்று வரும்படியாக வேண்டிக்கொள்வது.

**மிஷன் கருத்து:** ஆபிரிக்காவிலே நாஸ்திக லோகாதய ஆபத்துநீங்கும்படியாக மன்ருடிக்கொள்வது.

## சத்தியவேத பாதுகாவலன்

**1956-ம் ஆண்டு ஆடிமாதம் 19-ந் திகதி**

## அர்ச். சூசையப்பர் பந்தி

யாழ்ப்பாணம், சென்வின்சென்ற் டீ போல் சபை அர்ச். சூசையப்பர்பந்தி ஸ்தாபகமான ஐம்பதாம்வருட செம்பொன் யூபிலிவிழா இம்மாதம் 22-ந்திகதியாகிய வருகிறஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட விருக்கிறதெனும்சுபசெய்தியானது எவர்க்குமே பேரானந்தம் விளைவிப்பதாகும். ஏழைகளுக்கும், மற்றும் பல்வேறு ஆபத்திற்குள்ளாய் இருப்பவர்களுக்கும் ஆறுதலும், சகாயமும் அளித்துவருகின்ற தருமசபைகளில் சென்வின்சென்ற் டீ போல்சபையும் ஒன்ருகும். இது பரீஸ்நகர சர்வகலாசாலை வித்தியார்த்திகளில் ஒருவரான பிறெடறிக் ஓசானம்அவர்களால் இற்றைக்குச் சுமார் நூறு வருடங்களின்முன் அடியிடப்பட்டதாகும். தற்போது இதன் கிளைச்சபைகளான பந்திகள்உலக முழுவதிலுமேபரந்துசாதிபேதம், சாகியபேதம்பாராது ஏழைகளுக்கும், ஏனையோருக்கும் ஆபத்து, அவசியவேளைகளிலெல்லாம் ஆனசகாயம் செய்துகொண்டுவருகின்றன. நிற்க, தனதுஐம்பதாம்வருட செம்பொன்யூபிலிவிழாவை அர்ச். சூசையப்பர்பந்தி கொண்டாட விருக்கின்ற இச்சந்தர்ப்பத்திலே அதன் வரலாற்றைஅறியப் பலருமே ஆசிப்பார்களென நம்புகின்ரேம்.

இச்சிறுபந்தியானது பரீட்சார்த்தமாக 1905-ம்ஆண்டு தை மாதம் ஆரம்பிக்கப்படலாயிற்று. அர்ச். சூசையப்பர் கூட்டத்தைச் சேர்ந்த முதிய அங்கத்தவர்கள் எழுவரே இப்பந்தியின் முதல்அங்கத்தவர்களாகச் சேர்ந்துகொண்டார்கள். ஆரம்பத்தில் ஓர்சிறு மரக்கன்றுபோல் இருந்துவந்த இப்பந்தியானது தேவஇரக்கத்தினுலும், தனது பரலோகபாதுகாவலரான அர்ச். சூசையப்பரின் அனுக்கிரகத்தினுலும், ஏழைகளின் அன்னதாதாவாகிய அர்ச். அந்தோனியாரின் நாமத்தினுலே பணஉதவிபுரிந்துவந்த உபகாரிகளின்தயவினுலும் இன்று ஓர் ஆலாவிருட்சம்போல் வளர்ந்து, அந்தோ! வறுமைப்பிணியாலும், நோய்பிணியாலும் வாடிவதங்குகின்ற எத்தனையோ பெரும்ஏழைகளுக்கும், எத்தனையோ ஏழைக்குடும்பங்களுக்கும், ஆதரவற்றவர்களுக்கும், அநாதைகளுக்கும் வழுக்குநிலத்தில்ஓர்ஊன்றுகோல் போன்று ஆதரவாயும், தாபரமாயுமிருந்து இணையற்றநன்மைகளைச் செய்துகொண்டு வருகின்றது. யாழ்ப்பாணத்திலே முதன்முதலாக ஸ்தாபிக்கப்பட்ட பந்தியென்றபெருமையும், இலங்கையிலேயே முதன்முதலாகப்பரீஸ்நகரிலுள்ள தாய்ச்சபையுடன் இணைக்கப்பட்டதென்றபெருமையும் இப்பந்திக்கே உரியனவாகும்.

அர்ச். சூசையப்பர்பந்தி ஸ்தாபகமான முதலாவதுவருடமாகிய 1905-ம்ஆண்டிலே அது பரோபகாரிகளிடமிருந்து சேகரித்து ஏழைகளுக்கும், ஆதரவற்றவர்களுக்கும், அல்லலுற்றவர்களுக்கும் செலவிட்டபணம் 91 ரூபா97சதம் மாத்திரமே. இந்தப்பணம் வருடந்தோறும் படிப்படியாக அதிகரித்துவந்து, பந்தியின் 50-ம் ஆண்டுப் பொன்யூபிலிவருடமாகிய சென்ற 1955-ம்ஆண்டிலே அது செலவழித்துள்ள பணம் 3,700 ரூபா 78 சதமாகும். இதிலிருந்து இப்பந்தியானது கடந்த ஐம்பதுவருடங்களிலும்|எத்துணை பெரும்விருத்தி அடைந்துள்ளதென்பதையும், இந்த அரைநூற்ருண்டிலும் அன்னதானம், சொர்னதானம், வஸ்திரதானம், கல்வித் தானம்என்பனவாக எத்துணைபெருந் தானங்களைச்செய்து எத்தனைஏழைமக்களின் கஷ்டங்களைப்போக்கியும், கண்ணீரைத் துடைத்தும், பசியைஆற்றியும், மானம்மரியாதையைக் காப்பாற்றியும் வந்திருக்கிறதென்பதையும், எத்தனைபேருக்குச் சரீரநன்மைகளுடன் ஆத்துமநன்மையுஞ் செய்து நல்வழிகாட்டி யிருக்கிறதென்பதையும் எவரால்மதிப்பிட முடியும்?

இந்தப்பந்தியைக் கடந்தஅரைநூற்ருண்டிலும் பாதுகாத்துவைத்த எல்லாம்வல்ல இறைவனுக்கு இந்தவேளை நன்றித்துதி கூறுகின்ரேம். அருந்தியாகங்கள் மத்தியிலே இதனை அடியிட்டுக் கருத்தாகப்பேணிப் பரிபாலித்துவந்த வண. ஈ. குருசோபிறதர்அவரும், அவரைத்தொடர்ந்து இதனைச் சிறப்பாகநடத்திவந்த குருப்பிரசாதிகளும், தலைவர்கள், அங்கத்தினர்களும், இதனை ஆதரித்துவந்த ப்ரோபகாரிகள் அனைவரும் பொதுமக்களின் நன்றிக்குப்பாத்திரமானவர்களென்று சொல்ல வேண்டியதில்லை.

> **மௌனமே மங்கையருக்கு மேன்மையான மணியாரம். ஆனுல், அணிந்தால் அல்லவோ!**

## தமிழர்களின் எதிர்காலம்

ஈண்டுநாம் எடுத்துக்கூறுவது, நம்முடையஅபிப்பிராயம் மாத்திரமன்று, தமிழ்த்தலைவர்கள் பலரின் அபிப்பிராயமுமேயாகும். "எதிர்காலத்தில் தமிழர்களுக்கு அரசாங்க உத்தியோகங்கள் கிடைக்கா; தமிழ் இளைஞர்கள் கமத்தொழில், கைத்தொழில், வர்த்தகம் ஆதியவற்றைத்தான் மேற்கொள்ள வேண்டிவரும்; அவர்கள் கிளிநொச்சியிலும், வவுனியாவிலும்போய்க் குடியேறவேண்டும்"என அவர்களில்ஒருவர் கூறுகின்ருர்.

"தமிழ்ப்பேசும் மக்களுக்கு நெருக்கடிஏற்பட்டுள்ள இந்தவேளையிலே நாம்உத்தியோகத்தை நம்பியிருக்கக்கூடாது; தற்போதுள்ளநிலைமையில் தமிழ்மாணவர்களுக்கு அரசாங்கத்தில் உத்தியோகம்கிடைப்பது முயற்கொம்பாகும்; ஆகவே, அவர்கள் தங்கள் எதிர்காலவாழ்க்கையைச் சந்தோஷமாக நடத்துவதற்கு ஏற்றவழிவகைகளைஅறிந்து கடைப்பிடிக்கவேண்டும்; பொருளாதாரத் துறைகளில் ஈடுபடவேண்டும்; சிங்களவருடன் நின்றுபிடிக்கத் தக்கதாகப் பொருளாதாரநிலையை ஸ்திரப்படுத்தவேண்டும்; அதற்காக வன்னிப்பகுதிகளில்சென்று கமத்தொழிலை விருத்திசெய்தலும், குடிசைக்கைத்தொழில்களில் ஈடுபடுதலும் இன்றியமையாதன" என்று மற்ருெருவர்கூறுகின்ருர்.

"தமிழர்கள் அரசாங்க சில்லறை உத்தியோகங்களில் விகிதாசாரத்துக்குக்கூடவோ, குறையவோ இடம் பெறுவதைவிட, அவர்கள் சிறந்த முறையிலே கமத்தொழிலில் ஈடுபடுவதன்மூலம் தமது பொருளாதார நிலைமையைப் பெருமளவில் விருத்தி செய்துகொள்ள வேண்டும்; அன்றியும் விகிதாசாரத்திலும் மிகக் குறைந்தஅளவுக்கே தமிழருக்கு அரசாங்கஉத்தியோகங்களில் இடமளிக்க உத்தேசிக்கும் ஓர்அரசாங்கத்திடம் பிச்சைகேட்பதைவிடச் சுயமரியாதையுடன் வாழ்வதே மேலாகும்; அதனுல் அரசாங்கஉத்தியோகங்களை எதிர்பார்த்துக் கொண்டிராது தமிழ்ப்பிரதேசங்களில் எங்கும்பரந்து குடியேறிக் கமத்தொழிலில் அதிகமாக ஈடுபட்டுப் பொருளாதாரபலத்தைச் சிருட்டித்துக்கொள்ள வேண்டும்" என்று இன்ஞெருவர் கூறுகின்ருர்.

"தமிழரின் எதிர்காலம் இலகுவானதன்று; அதனுல் கமத்தொழிலிலும், கைத்தொழிலிலுமே நாம் நம்பிக்கைவைக்கவேண்டும்; ஆனையிறவுக் கப்பால்கிடக்கும் ஆயிரக்கணக்கான ஏக்கர்பூமியைக் கமத்தொழிலுக் குள்ளாக்கவேண்டும்" என்று பின்ஞெருவர் கூறுகின்ருர்.

ஆமாம், கல்விப்பகுதியிலே அரசாங்க தமிழ்ப்பாடசாலைகள் பிரிவின் தமிழ்அதிகாரிகளையும், தமிழ்க்கிளாக்குமாரையும்உடனடியாக இடமாற்றஞ்செய்துவிட்டு, அவர்களிடமாகச் சிங்களஅதிகாரிகளையும், சிங்களக்கிளாக்குமாரையும்—இது இயலாதெனக்கண்டதும் முஸ்லீம்அதிகாரிகளையும், முஸ்லீம்கிளாக்குமாரையும் நியமனஞ்செய்யும்படியாய் எழுந்தமானமாகச் சர்வாதிகாரப்போக்கிலே அதிகாரதோரணையில்ஆஞ்ஞாபிக்கும் கல்விமந்திரிதஹநாயாகபோன்ற சிங்கள தீவிரவாதிகளின்மனப்பான்மையால் எதிர்காலத்தில் தமிழர்களின்பாடு என்னவாகுமோஎன்றுதான் சிந்திக்கவேண்டியிருக்கிறது.

ஆமாம், அன்று ஓர்தமிழ்ப்பெரியார் கூறியதுபோல, இன்று ஓரிடத்திலே தமிழ்மக்கள்கூடினுல் மொழிப்பிரச்சினைபற்றியும், தனிச்சிங்களசட்டம்பற்றியுமே பேசிக்கொள்ளுகின்றனர். மக்கள்அனைவரும் கவலையும், தோல்விமனப்பான்மையும் உடையவர்களாய்க் காணப்படுகின்றனர். ஆனுல், இந்தக் கவலையும், தோல்விமனப்பான்மையும் அகலவேண்டும். தன்கையே தனக்குதவி, முயற்சி திருவினையாக்கும் என்பன போன்ற மனப்பான்மை எழவேண்டும். வாழப் புத்திபார்க்க வேண்டியதே தமிழரின் இன்றைய பெருங்கடனுகும்.



நமது மேற்றிராணியாராகிய மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர்அவர்கள் திருநாமங்கொண்ட பெருநாள் நிகழும் ஆடிமாதம் 20-ந் திகதியாகிய நாளை வெள்ளிக்கிழமை வருகின்றதுஎன்பதை அவரது ஞானமக்கள் அனைவருக்கும் ஞாபகமூட்டுகின்ரேம். அன்றுதினம் சகலரும் — விசேஷமாகப் பாடசாலைப்பிள்ளைகளும் அவரதுகருத்துகள் அனுகூலமாகும்படியாகப் பக்திபற்றுதலுடன் மன்ருடிக்கொள்வார்களாக! இன்னும் நமதுமேற்றிராசனத்திலே தேவஅழைத்தல்கள் பெருகவேண்டுமென்றுஆண்டவர்அவர்கள் எத்துணைபெரும் ஆவல்கொண்டுள்ளார் என்பதையும், நம்முடைய மேற்றிராசனத்திலே இது தேவஅழைத்தலின் வருடம் என்பதையும் எல்லோருமே நன்கறிவார்கள். அவர்கொண்டுள்ள இந்தஆவல்இனிதே பூர்த்தியாகித் திடகாத்திரத்துடனும், தீர்க்காயுசுடனும், சிறந்த ஞானத்துடனும் அவர்தமது ஞானமந்தையைச் சிறப்பாக ஆண்டுவரத்தக்கதாகத் தெரியலான திருவருட்பிரசாதங்களையெல்லாம் மழைபோலஅவர்மேல் பொழிந்தருளுமாறு இறைவன் திருவடிகளை இரந்துகொள்ளுகின்ரேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தூய கன்னிமை"
## என்னும்
## 12-ம் பத்திநாத பாப்பரசரது
# பொதுநிருபம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

தங்கள் கன்னிமையைப் பெண் பரிசத்தால் பழுதுரு து பாதுகாத்த ஆடவரைப் பற்றி அப்போஸ்தலரான அர்ச். அருளப்பர் கூறுவது யாதெனில், "செம்மறிப்புருவையானவர் போகும் இடங்கள்தோறும அவரைப்பின்செல்லுகிருர்கள்" என்பதே (காட்சி. 14: 4). எனவே, அர்ச். அகுஸ்தீனுர் இவ்வகுப்பினருக்குக்கூறிய நன்மதிகளைச் சற்றுத்தியானித்தல் நன்ருகும்: "நீங்கள் செம்மறிப்புருவையானவரைப் பின்பற்றுகிறீர்கள். ஏனெனில், செம்மறிப்புருவையானவரின் சரீரம் உண்மையாகவே கன்னிமை பொருந்தியது. ஆத்தும சரீரகன்னிமையை நீங்கள் அனுசரிப்பதனுல் அவர் செல்லுமிடமெல்லாம் மெய்யாகவே அவரைப் பின்பற்றுகிறீர்கள். ஏனெனில், பின்பற்றுதல் கண்டுபாவித்தல் அன்றி வேறுயாது? அப்போஸ்தலரான அர்ச். பேதுருவானவர் கூறுவதுபோல, "கிறிஸ்துநாதர் நமக்காகப்பாடுபட்டுத் தம்முடைய அடித்தடங்களைப் பின்பற்றும்படியாக நமக்கு மாதிரிவைத்துவிட்டுப் போயிருக்கின்ருர்" (I பேதுரு 2: 21) (De Sacra-Virginitate c. 27). ஆகையால், அர்ச். பொனவெந்தூர் கூறுவதுபோல, கிறிஸ்துநாதரின் சீஷர்களும் பத்தினிகளுமாகிய யாபேரும் "தங்கள் பத்தாவாகிய கிறிஸ்துநாதரைப்போல இருக்கும்படியே கன்னிமை நிலையை ஏற்றுக்கொண்டனர். ஏனெனில், அந்நிலை கன்னியர்களை அவரைப் போல்ஆக்கி விடுகின்றது" (De perfectione Evangelica, Q. 3, A. 3).

நேசபந்தனங்களால் கிறிஸ்துநாதரோடு ஐக்கியப்படுதல் மாத்திரம் அவர்கள் அவர் மேல்கொண்டுள்ள தணியாத அன்பைத் திருப்திசெய்யப் போதுமானதன்று. எனவே, இவ்வன்பு அவருடைய புண்ணியங்களைப் பின்பற்றுவதினுலும், இன்னும் விசேஷமாய் அவருடைய சீவியமாதிரிகைக்கு இசைந்துநடப்பதினுலும் வெளிப்படையாதல் அவசியம். ஏனெனில், அவருடைய சீவியம் மனுக்குலத்தின் நன்மைக்கும், இரட்சணியத்துக்குமாகவே செலவிடப்பட்டது. குருக்கள், சந்நியாசசீவியத்தைத் தெரிந்துள்ள ஆடவர் பெண்டிர், இன்னுமதேவ ஊழியத்துக்கு எதுவிதத்திலும் தங்களைக் கையளித்தவர்கள் ஆகிய யாபேரும் பூரண கற்பை அனுசரிப்பதன்காரணம் யாதெனில், நம் திவ்வியகர்த்தர் தமது வாழ்நாள் முழுதும் கன்னிமையைக் காத்ததுதான் என்பது திண்ணம்.

"இவரே தேவனின் ஏககுமாரன்; ஒருகன்னிகையின் ஏககுமாரனும் இவரே; தூய கன்னியர்களின் ஏகபத்தாவும் இவரே; தூய கன்னிமையின் பேறும், மகிமையும், கொடையும் இவரே; இவரையே தூய கன்னிமை உலகிற்கு உருவாக்கியது; இவருடனேயே தூய கன்னிமை ஞான முறையில் விவாக பந்தனத்தால் இணைக்கப்பட்டுள்ளது; இவராலேயே தூய கன்னிமை பேறுபெற்றுப் பழுதுரு து நிலைத்திருக்கின்றது; இவராலேயே அது என்றும அழகு வாய்ந்ததாய் இருக்கும்படி அலங்கரிக்கப்பட்டுள்ளது; இவராலேயே அது மகிமைப்பிரதாபத்தோடு எப்போதும் ஆட்சி புரியும் பொருட்டு மகிடமும் சூட்டப்பட்டுள்ளது" என அர்ச். வுள்சென்சியார் வியந்து கூறுகின்ருர். (Ep. 3, C. 4, n. 6.)

### 3. தூயகன்னிமை ஓர் ஞானச்சுயாதீனம்

வந்தனைக்குரிய சகோதரரே, கிறிஸ்துநாதரின் அன்பு, உதாரகுணமுள்ள ஆன்மாக்களை விவாகத்தைத்தவிர்த்து நடக்கும்படி ஏன் தூண்டுகிறதென்றும், கன்னிமைக்கும் கிறிஸ்தவ சாங்கோபாங்கத்திற்குமுள்ள தொடர்பு என்னவென்றும் இன்னும் விரிவாயும் நுணுக்கமாயும் எடுத்துரைப்பது தகுதியெனக் கருதுகிருேம. பூரணவிவாகத்தவிர்ப்பானது மக்களை விவாகக் கடமைகளிலும் பொறுப்புகளிலுமிருந்து விடுதலையாக்குகிறதெனத் திவ்விய கர்த்தரின் மேற்கூறப்பட்ட வாக்கியத்திலுல் தெரியவருகிறது. இச்சுயாதீனத்தின் காரணத்தைப் பிறசாதியாரின் அப்போஸ்தலர் தேவ ஏவுதலால் தூண்டப்பட்டு எழுதியபோது பின்வருமாறு விளக்குகிருர்: "நீங்கள் கவலையற்றவர்களாய்இருக்க விரும்புகிறேன்.... ஆனுல், மனைவியோடு இருக்கிறவன் தன் மனைவிக்கு எப்படிப்பிரியப்படலாமென்று உலகத்திற்குரியவைகளில் கவலையுற்று இருமனப்பட்டிருக்கிருன்" (1 கொரி. 7, 32—33). ஈண்டு கவனிக்க வேண்டிய குறிப்பு ஒன்றுண்டு. அப்போஸ்தலர் தலைவன் தன் தலைவியின் மேல் கவலை கொள்வதையோ, அன்றேல் தலைவி தன் தலைவனுக்குப் பிரியப்படத் தெண்டிப்பதையோ கண்டிக்கவில்லை. ஆனுல், அவர்களுடைய இருதயங்கள் தேவனுக்கும் வாழ்க்கைத்துணைவருக்கும் இடையில் பிரிந்திருப்பதையும், அரிக்கும் கவலைகளால பீடிக்கப்பட்டு, விவாக அந்தஸ்தின் கடமைகளின் நிமித்தம் தேவனை ஆழ்ந்து தியானிக்க முடியாதவர்களாய் இருப்பதையுமே குறிப்பிடுகிருர்.

அவர்களைப் பந்தித்துள்ள விவாகக்கடமையானது, "இருவரும் ஒரே மாமிசமாய் இருக்கக்கடவார்கள்" (ஆதி. 2, 24; மத். 19, 5) என வெளிப்படையாய்க் கட்டாயப்படுத்துகின்றது. ஏனெனில், தம்பதிகள் இன்பத்திலும் துன்பத்திலும் அன்னியோன்னிய பாசத்தால் கட்டுப்பட்டவர்களாய் இருத்தல் அவசியம். ஆகவே, தேவ ஊழியத்திற்குத் தங்களை நைவேத்தியம் செய்ய விரும்புவோர் தேவசித்தத்திற்குத் தங்களை அதிபூரணமாய்க் கையளிக்கும்படியும், அயலாரின் நன்மைக்காகத் தங்களைச் செலவிடும் பொருட்டும், கன்னிமை நிலைமையை ஏன் தெரிந்து கொள்ளுகிருர்களென்று இத்தால் வெளியாகின்றது. பேர்போன வேதபோதகரான அர்ச். பிரான்சீஸ்கு சவேரியார், ஏழைகளின் இரக்கம்மிக்க தந்தையாகிய அர்ச். பவுலா வின்சேந்தியார், இளைஞரின் ஆர்வம் மிக்க வழிகாட்டியான அர்ச். பொஸ்கோ அருளப்பர், "தம்நாட்டைவிட்டு வெளியேறினேரின் தயங்காத அன்னையாகிய" அர்ச். பிரான்சீஸ்கு சேவியர் கப்றீனி என்போரும், இவர்களைப் போன்ற பிறரும், மனைவியின், கணவனின், அல்லது பிள்ளைகளின் சரீர ஆத்தும தேவைகளைக் கண்காணிக்கவேண்டியவர்களாய் இருந்திருப்பின், அன்னர் கஸ்திகள் மத்தியில் ஆற்றிய அரும்பெரும் தொண்டுகளை எங்ஙனம் நிறைவேற்றியிருப்பர்?

தேவசேவைக்கோ அல்லது அயலாரின் சேவைக்கோ தங்களை முற்ருகக் கையளிக்க விரும்பும் ஆன்மாக்கள் கன்னிமை நிலைமையைத் தெரிந்துகொள்வதற்கு இன்னுமோர் காரணமுண்டு. அது யாதெனில், திருச்சபைப்பிதாக்கள் அபரிதமாய்க்காட்டியிருப்பதுபோல், சரீரசுகபோகத்தைமுற்ருய்த் தவிர்த்து நடப்பதால் சாங்கோபாங்க சீவியத்தில் அபிவிருத்தி அடைவதற்குக் கிடைக்கும் உதவிஒத்தாசையேயாம். மேற்கூறிய சுகபோகஙகள் முறையான விவாகத்தால் உண்டாகும்போது அவை தவருனவை என்று எண்ணுவதற்கு இடமில்லை. ஆனுல், திருச்சபைப் பிதாக்கள் தாமே துலக்கமாகக் குறிப்பிடுவதுபோல், கற்போடிணங்கிய விவாகப் பிரயோகம் ஓர் விசேஷ தேவதிரவிய அனுமானத்தால் மகிமைப்படுத்தப்பட்டும் அர்ச்சிக்கப்பட்டும் இருக்கின்றது. எனினும், ஆதாமின் பாவத்தின் பயனுக மானிடசுபாவத்தின் கீழ்ச்சக்திகள் பகுத்தறிவுக்குக் கீழ்ப்படியாது இருப்பதினுல், மனிதனைக் கெட்ட கிரிகைகளில் அமிழ்த்திவிடவும்கூடும் என்பதையும் ஏற்றுக்கொள்ளல் அவசியம். சம்மனசிய வேதபாரகர் என்று அழைக்கப்படுகிற அர்ச். அக்குவீனுத் தொம்மையப்பர் கூறுவதுபோல, "விவாகப் பிரயோகமானது ஆத்துமம் தன்னைத் தேவ ஊழியத்திற்கு முற்ருகக் கையளிப்பதற்குத் தடையாய் இருக்கிறது." (Summa II—II, Q 186, a. 4).

மேற்கூறிய சரீர ஆத்தும ஞானச்சுயாதீனத்தை அடையும் பொருட்டும், உலகக் கவலைகளில் இருந்து நீங்கியிருக்கும் பொருட்டுமே இலத்தீன் திருச்சபையானது திருஊழியர் பூரணகற்பை அனுசரிக்கத் தங்களைச் சுயேச்சையாய்க் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சட்டம் விதித்துள்ளது. "இதைப்போன்ற ஓர் சட்டம் கீழ்த்தேசத்திருச்சபையின் திரு ஊழியர்களையும் இதேமுறையில் கட்டுப்படுத்தாவிடினும், அவர்கள் மத்தியிலும் வேதியவிரத்தத்துவம் மகிமையாகப் பாராட்டப்பட்டு வருகின்றது. மேலும் சிலசந்தர்ப்பங்களில், விசேஷமாய்த் திருச்சபை அதிகார வரிசையின் மேற்பதவிகளை வகிப்போரைத் தெரிந்தெடுக்கும்போது இவ்விரத்தத்துவமானது கட்டாயமும் அத்தியாவசியமுமான ஓர் நிபந்தனையாகவும் அமைகின்றது" என்று பொன்ரு நினைவிற்குரிய நம்முன்னவரான 11-ம் பத்திநாதர் குறிப்பிட்டுள்ளார் (Ad Catholici Sacerdoti).

இன்னும் திருஊழியர்கள் இரட்சணியத்தொண்டின் நிமித்தம் மட்டும் அன்றி, பலிபீடத்தில் தாம் செய்யும் சேவையின் நிமித்தமும் விவாகத்தைத் தவிர்த்து வருகின்றனர் என்றும் குறிப்பிடத்தகும். ஏனெனில், பழைய ஏற்பாட்டுக் குருக்கள் ஏனைய மனிதரைப்போல் வேதப்பிரமாணப்படி தூய்மையற்றவர்களாகக் கருதப்படுவார்கள் எனப்பயந்து, தேவாலயத்தில் திருத்தொண்டாற்றும் காலங்களில் விவாகப் பிரயோகத்தைத் தவிர்த்து நடக்க வேண்டியவர்களாய் இருந்தார்கள். அப்படியாயின் அனுதினமும் தேவநற்கருணைப் பலியை ஒப்புக்கொடுக்கும் யேசுக்கிறிஸ்துநாதரின் திரு ஊழியர்கள் பூரணகற்புள்ளவர்களாய் ஒழுகுவது இன்னும் மிகப் பொருத்தமுள்ளதன்ருே! பூரணகற்பை அனுசரிக்கும்படி அர்ச். தமியான் இராயப்பர் குருக்களுக்கு நன்மதி புகட்டும்போது பின்வருமாறு கூறுகிருர்: "எங்கள் திவ்விய மீட்பர் பழுதுருக்கற்புமலரை மேலாக நேசித்ததாலன்ருே ஓர்கன்னிகையின் உதரத்தில் இருந்து பிறந்தார்; சிறுபாலனு

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரியன்னையின் திருவருள்

— P. பெனடிற் —

[இது ஒரு உண்மைக்கதை. இதில் கூறப்பட்டுள்ள இருகுருமாரும் தற்பொழுது சீவந்தராய் இருக்கிறார்கள். எனவே, அவர்களின் உண்மைப்பெயர்களுக்குப் பதிலாகப் புனைபெயர்கள் கொடுத்துள்ளேன்.]

அது ஒருநல்ல கிராமம். அங்கு ஒரு உத்தம பெண்மணி இருந்தாள். அவளுக்கு இருபுத்திரர் இருந்தார்கள். அவர்களில் பவுல் மூத்தவன். ஜோண் இளையவன். இவர்களின் அன்புள்ளதந்தை குருத்துவத்தின் மகிமையையும், குருமாரில்லாக் குறையையும் நன்கு உணர்ந்தவர். ஆகவே, அவர் தமது மூத்தமகனுக்குக் குருத்துவத்தின் மகிமைபற்றி அதிகம்சாதுரியமாக அடிக்கடி வற்புறுத்திவருவார். தந்தையின் நற்புத்திமதிகள் தனயன்பவுலை வேதசாஸ்திரங்கற்கக் குருமடத்திற்கு அனுப்பின. அங்கு அவன் குருத்துவகல்வி கற்றுக்கொண்டிருந்தான்.

ஆனால், தந்தை இளையமகன் ஜோணுக்குக் காலம்வந்ததும் விவாகம் செய்துவைத்துத் தனதுகுடும்ப பெயரை நிலைக்கச்செய்ய வேண்டுமெனப் பலவருடங்களுக்கு முன்னரே மனதில் எண்ணிக்கொண்டார். இவ்வெண்ணப்படி அக்கிராமத்திலுள்ள ஓர் இளம்பெண்ணையே தன்மகன் ஜோணுக்கு விவாகம் செய்துவைப்பதென மனதிலே நிச்சயித்துக்கொண்டார். அதனால்அவர் "இன்னும் சிலவருடங்களில் என்னுடைய இளையமகன் விவாகம் செய்துவிடுவார்; பெண்ணுக்கும் கலியாணவயதாகிறது" என அடிக்கடி கூறிக்கொள்வார்.

ஜோண் 13வயதுப் பாலியபுதல்வனாய் இருந்தபொழுதிலும் எந்தப் பெண்பிள்ளையையும் தனது கண்ணால் உற்றுநோக்கியவனல்ல. எப்பொழுதாவது தன்பெற்றோர் கலியாணத்தைப்பற்றிக் கதைக்கும்பொழுது ஜோணுக்கு வெட்கமும், கோபமும் உண்டாகும். அவன் தனதுவெறுப்பைக் காட்டிக்கொள்வதற்காகச் சிலசமயங்களில் பட்டினிகிடப்பான். வேறுசில சந்தர்ப்பங்களில் வீட்டைவிட்டு வெளியே ஓடியதுமுண்டு.

அக்கிராமத்தில் சிறுதேவாலயம் ஒன்றிருந்தது. அதிலே ஓர்அழகிய தேவமாதாவின் சுரூபமுமிருந்தது. ஜோண் தனது மோட்சநாயகியைத் தரிசிக்க அச்சிற்றாலயத்திற்கு அடிக்கடிசெல்வான். அவனுடைய மனவிருப்பத்தைத் தேவஅன்னை நன்றாக அறிந்திருந்தாள். அவனுக்கு உலகம் நரகம்போல்இருந்தது. மனதில் உண்டான தீர்மானத்தின்படி அவன் தனக்குள்தானே சொல்லிக்கொள்வான்:

"ஓ, கலியாணம்! என்னஇழவு! ஒருபோதுமில்லை. கலியாணஞ் செய்துகொள்வதைப் பார்க்கிலும் சாவதுநலம்; ஆனால், நான் என்ன செய்வது? எல்லோரும் கலியாணம் செய்யும்படி என்னை நிர்ப்பந்திக்கிறார்களே; எனக்கு உதவிசெய்ய ஒருவருமில்லையே; நான் எனது தந்தையின் மூத்தபுதல்வனாக இருந்திருப்பின் இப்போது குருமடத்திலிருப்பேனே; இந்தச்சிக்கலிலிருந்து யார் என்னை விடுவிப்பார்?" அவனுடையவாய் இந்தவார்த்தைகளைக் கூற, அவனுடைய ஒளிநிறைந்தகண்கள் தேவஅன்னையின் உருவத்தை நோக்கிக்கொண் டிருந்தன.

மாரிகால விடுமுறையில் ஒருநாள் தகப்பன் ஜோணைநோக்கி: "மகனே! உன்னை ஆறும்வகுப்புவரையும் படிப்பித்துள்ளேன்; இவ்வளவு கல்வியும் உனக்குப்போதும்; இனிமேல் உன்விடுதிச்சாலைச் செலவு பணத்தை என்னாற்கட்டமுடியாது; எனதுபணமெல்லாம் உனதுஅண்ணனின் படிப்புக்கென்று செலவு செய்கிறேன்; மேற்கொண்டு இருவரையும் ஒரேமுறையிற் படிப்பிப்பது என்னாற் கூடாதகாரியம்; நீ பாடசாலைக்கு இனிமேல் போகவேண்டாம்" எனக்கூறினார். ஆனால், ஜோண் அவர் தனக்குக் கலியாணம் செய்துவைப்பதற்காகவே இவ்விதம் கூறுகிறாரென எண்ணிக்கொண்டு, "நான் ஒருநாள் குருவாவேன்; செலவைப்பற்றிப் பரவாயில்லை" என உறுதியாகக் கூறினான்.

அடுத்தநாள் அடுத்த தவணை ஆரம்பமாகவிருந்தது. கிராமத்திலுள்ள மாணவர்களெல்லாம் பாடசாலைக்குச்செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர். ஜோண் அவர்களைக் கவனித்தான். வீட்டுக்குச் சென்று அழுதுகொண்டு தந்தையிடம்போய்த் தன்னைப் பாடசாலைக்கு அனுப்புமாறு கேட்டான். உடனே அவருக்குக் கோபம்பிறந்தது. கலப்பையையும், நுகத்தையும் அவன்காலடியிற் போட்டுவிட்டு, "உடனே வயலுக்குப்போய் உழவேண்டும், அல்லது என்னிடம் நல்ல அடிவாங்குவாய்" என உறுமினார். அவனும் அவருடைய சொல்லுக்கமைந்து கலப்பையையும், நுகத்தையும் எடுத்துக்கொண்டு அழுதழுது வயலுக்குச்சென்றான். நாள்முழுவதும் வேலைசெய்தான். வேலையை முடித்து வீட்டுக்குச்செல்லுமுன் தேவாலயத்திலுள்ள மரியன்னையின் திருச்சுரூபத்தின்முன்பாக ஒருமணித்தியாலம் இதயம்கரையச் செபித்தான். கடைசியாகச் சுரூபத்தை ஏறெடுத்துநோக்கினான். ஆனால், சுரூபம் அவனைப்பார்க்கவில்லை. அப்படியிருந்தும் தனது இதயநாயகியாம் மரியன்னைக்குத் தனது அன்பார்ந்த வந்தனத்தைச் செலுத்திவிட்டு வீட்டுக்குச்சென்றான்.

அடுத்தநாள்காலை அவன் தந்தை அவனைப்பார்த்து: "சோம்பேறியே! இனிப் படிப்பாய்என்றஎண்ணத்தை இப்பொழுதே விட்டுவிடு; சீக்கிரம் கலப்பையையும், நுகத்தையும் எடுத்துக்கொண்டு, எருதுகளையும் செலுத்திக்கொண்டு வயலுக்குப்போ" எனக் கட்டளைபிறப்பித்தார். அவன் பெரிதும் மனவருத்தத்தோடு வயலுக்குச் சென்று எருதுகளைக் கலப்பையில் பூட்டும்பொழுது தனது உடன் மாணவர்கள் பாடசாலைக்கு விரைந்துசெல்வதைக் கண்டான். அவனால் பாடசாலைக்குப்போகாமல் இருக்க முடியவில்லை. அதனால், அவனும் அவர்களோடுசேர்ந்து அன்று பாடசாலைக்குப்போனான்.

(தொடரும்)

# பூசைப்பலியின் மகத்துவம்

(சி. எஸ். நாயகம், ஸ்டேஷன்மாஸ்றர், கெம்பாஸ் — மலாயா)

(முன்தொடர்ச்சி)

திருச்சபையின் முதலாம்கட்டளை ஞாயிற்றுக்கிழமைகளிலும், கடன் திருநாட்களிலும் முழுப்பூசைகாண வேண்டும்என்பதே. "முழுப்பூசை" என்னும் கட்டளையைநிறைவேற்ற (1) நாம் கோவிலில் இருக்கவேண்டும். (2) முழுக்கவனத்தோடும், சுத்தகருத்தோடும் காணவேண்டும். (3) பூசையின்ஆரம்பமுதல் கடைசிமட்டும் — அதாவது, குருவானவர் பீடத்தின்கீழ்நின்று பூசைச்செபம் தொடங்குவதிலிருந்து பீடத்தைவிட்டுப் போகும்வரையும் காணவேண்டும். இன்னும்பூசையிலே நான்கு பாகங்கள் உண்டுஎன்பதை நாம் அறிந்திருக்கவேண்டும். அவற்றில் பூசைஆரம்பத்திலிருந்து விசுவாசமந்திரம் முடிகிறவரை முதற்பாகம். அதுமுதல் வசீகரம் — அதாவது, எழுந்தேற்றம்வரையும் இரண்டாம் பாகம். இதிலிருந்துகுருவானவர் திவ்வியநற்கருணை உட்கொள்ளும்வரையும் மூன்றாம்பாகம். பூசைமுடியும்வரையும் நாலாம்பாகம்.

இனிநாம் அடுத்தபடியாக அறியவேண்டியவை: (1) பூசையின்முதல் பாகம் (அதாவது, தொடக்கமுதல் விசுவாசமந்திரம் முடிகிறவரை), (2) நாலாம்பாகம் (அதாவது, குருவானவர் திவ்வியநற்கருணை உட்கொண்டதிலிருந்து பூசைமுடிகிறவரை). இவைகளைக் காணத்தவறுவோர் அற்பபாவங் கட்டிக்கொள்ளுகிறார்கள். ஆனால், இருபாகங்களையும் ஒரேசமயத்தில் காணத்தவறுகிறவர்கள் சாவானபாவம் கட்டிக்கொள்ளுகிறார்கள். பூசையின் பிரதானபகுதிகள் இரண்டாம்பாகமும் (அதாவது, விசுவாசமந்திர முடிவிலிருந்து எழுந்தேற்றம்வரை) மூன்றாம்பாகமும் (அதாவது, எழுந்தேற்றத்திலிருந்து குருவானவர் திவ்வியநற்கருணை உட்கொள்ளும்வரை) தான். இந்த இருபாகங்களிலும் ஒன்றைக்காணத் தவறினாலுஞ்சரி, இரண்டையும் காணத்தவறினாலுஞ்சரி சாவான பாவமாகும். ஆகவே, முன்சொன்ன நான்குபாகங்களிலும் ஏதோஒன்றுக்குப் பிந்திப் போகிறவர்கள் அற்பபாவத்தையோ, சாவானபாவத்தையோ கட்டிக்கொள்ளுகிறார்கள்.

சிலர் முதற்பூசையில்பாதியையும், இரண்டாம்பூசையில் பாதியையும் கண்டால் முழுப்பூசைகாணுங்கடமை தீர்ந்ததென்று நினைக்கலாம். இது பிசாசின்ஏமாற்றுவித்தை. ஒரே பூசையை முழுப்பூசையாகக் காண்பதே முழுப்பூசைக் கடனைத்தீர்ப்பதாகும். இங்கொருபாகம், அங்கொருபாகமாகக் காண்பது முழுப்பூசையல்ல.

நிற்க, பூசைகாணக் கடமையுள்ளவர்கள்யார்? கடமைஇல்லாதவர்கள் யார்? 7வயது நிரம்பியவர்கள்முதல் சகலர்க்கும் ஞாயிற்றுக்கிழமைகளிலும், கடன்திருநாட்களிலும் முழுப்பூசைகாணக் கடமையுண்டு. இதுவும் திவ்வியபூசை நிறைவேறும் கோவிலிலிருந்துஇரண்டுமைல்தூரத்துள்வசிப்பவர்களுக்குஇந்தக்கடமையுண்டு. பூசைகாணக் கடமையில்லாதவர்கள்:

(1) கோவிலுக்குப்போகப் பலமில்லாதவர்களும், வியாதிஸ்தர்களும்.

(2) வியாதிக்காரருக்குத் துணையாய்வீட்டிலிருப்பவர்கள். (இரண்டு பூசைநடந்தால் இவர்கள்ஒருவர்மாறி ஒருவர் போகவேண்டும்.)

(3) கோவிலிலிருந்து இரண்டு மைல்தூரத்துக்கப்பால் வசிப்பவர்கள். (இவர்கள்ஒன்றுகூடித் தங்கள் கோவிலில் அல்லதுதங்கள்வீட்டில் பூசைத்தியானம் வாசிக்கவேண்டும்.)

(4) பூட்டுஅறிக்கை இல்லாத வீட்டுக்குக் காவலாயிருப்பவர்கள் (இரண்டுபூசைகள்நடந்தால் ஒருவர் மாறி ஒருவர்போகவேண்டும்.)

(5) பூசைகாணப் போவதால் தங்களுக்கோ, அன்றேல்பிறருக்கோ பெரும்(ஆத்தும)நஷ்டமுண்டாக்குபவர்கள். (இதுவிசேஷமாக இளம் பெண்கள் நாணமற்றவகையில் மரியாதைக்குறைவாக உடைகள் அணிந்து பிறருக்குப்பாவச்சோதனை உண்டுபண்ணுவதாகியஆபத்தைக் குறிக்கும். இப்படிப்பட்டவர்களுக்குத் திருவிருந்துப்பந்தியில் தேவநற்கருணை கொடுக்கப்படாதென்பது பாப்பாண்டவரின் கண்டிப்பானகட்டளை.)

(6) வேறுதவிர்க்கமுடியாத எக்காரணத்திலாவது பூசைகாணமுடியாதவர்கள். (இவர்கள் அந்தக்காரணம் என்னவென்பதைத் தங்கள் அடுத்த பாவசங்கீர்த்தனத்தில் சொல்லிச் சந்தேகத்தைத்தீர்த்துக் கொள்ளவேண்டும்.)

நாட்பூசைகாண வசதியுள்ளவர்கள் அதைக்கண்டால் அவ்வளவும் பெரும்நன்மையாகும். காணாவிடில் எவ்வித அற்பபாவந் தன்னுமில்லை. பூசையைப்பற்றி நாம்அறியவேண்டிய முக்கியமான-பிரதானமானகாரியங்கள், விசேஷங்கள் இவ்வளவுதான். இவ்விபரங்களையெல்லாம் அறிந்தபின் இனிமேல் பூசைக்குப் பிந்துகிறவர்கள் அல்லதுகாணத்தவறுகிறவர்கள் தேவசந்நிதானத்தில் எவ்விதபோக்கும் சொல்லித்தப்பிக் கொள்ளமாட்டார்கள் என்பதை அழுத்தம்திருத்தமாகத் தங்கள்இருதயத்தில் நன்குபதிப்பார்களாக!

எனவே, எவ்வளவோ ஞானத்திரவியங்களைக்கொண்ட வைரமலைக்கொப்பான—தங்கச்சுரங்கத்துக்கு நிகரான திவ்வியபூசையைக் கண்டு நமதுஆத்தும, சரீரத்துக்குவேண்டிய சகலவரப்பிரசாதங்களையும் நிறைவாகப் பெற்றுப் பெரும்ஞான செல்வந்தராய்வாழப் பிரயாசப்படுவோமாக! திருச்சபையெனும் வானமண்டலத்தில் சோதிமயமாய்த் துலங்கும் ஞானசூரியனாகிய திவ்விய பூசைப்பலியின் பிரகாசத்தில் நாம் உலாவி, மறுமையின் நித்தியபிரகாசத்தில் பிரவேசித்து நித்தியானந்தராய்வாழ நம்மாலானமட்டும் வருந்துவோமாக!

சுபம்!

மகிழ்ச்சி பொங்கும் சிரிப்புக்கு ஊற்று மகிழ்ச்சி நிறைந்த இருதயந் தான். கருணையில்லாவிட்டால் உண்மையான மகிழ்ச்சி இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி தனிநாயகம் அவர்களும் தமிழ்மொழிச் சம அந்தஸ்தும்

மன்னார்த் தமிழ்ப் பாதுகாப்புத் தொண்டர்படையின் ஆதரவிலே மன்னார்ப்பிரதிநிதி திரு. வி. ஏ. அழகக்கோன்அவர்கள் தலைமையிலே மன்னார் நகரமண்டபத்தில் சென்ற 14-ந்திகதி சனிக்கிழமை நடந்தேறிய மாபெரும் பொதுக்கூட்டம்ஒன்றில் வண. எஸ். சேவியர் தனிநாயகம் சுவாமியவர்கள் தமிழ்மொழிக்குச் சமஅந்தஸ்து வழங்கப்படவேண்டிய அவசியம்பற்றி ஓர்சொற்பொழிவாற்றினர். அவ்வேளை தலைவர் தமது ஆரம்பவுரையிலே சுவாமிதனிநாயகம்அவர்கள் தமிழுக்கும், தமிழ்க் கலாசாரத்துக்கும் ஆற்றிவந்துள்ள அரும்பெருஞ்சேவைகளைப் பாராட்டிப்பேசினர். ஜனப் என். எம். ஏ. கபூர்அவர்கள் தமிழ்கலாசாரவளர்ச்சியிலே இந்துக்களும், கிறீஸ்துவர்களும், முஸ்லீம்களும் செய்துள்ளவைகளை விளக்கமாக எடுத்துக்காட்டிப் பேசினர்.

சுவாமிதனிநாயகம்அவர்கள் பேசியதுவருமாறு: “நான் எந்தஅரசியற் கட்சியையும் சேர்ந்தவன் அல்ல. ஆனல், தமிழ்ப்பேசும்மக்களின் உயிருக்குயிரானமொழி நசுக்கப்படும்போது நான் அதைப்பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஆகவே, நான் ஊரூராகச்சென்று மக்களிடையே மொழியுரிமைபற்றி மீண்டும் மீண்டும் பேசிவருகிறேன். பாஷைப் பிரச்சினை இலங்கையையோ, அன்றேல் இந்நாட்டிலுள்ள சமூகங்களையோ பிளவுபடுத்தக்கூடாது. இதுவே எனதுவிருப்பமாகும்.

“இந்நாட்டிலுள்ள சகலசமூகத்தவர்களும், சமயத்தவர்களும், ஒற்றுமையாகவும், சமாதானமாகவும் வாழவேண்டும். இதற்குச்சம அந்தஸ்து மிகவும் இன்றியமையாதது. உலகிலுள்ள வேறுஎத்தனையோ நாடுகளைப் பார்க்கும்போது அவைகள் ஒன்றுக்குமேற்பட்ட பாஷைகளை உத்தியோகபாஷைகளாகக் கொண்டு நல்லமுறையிலே இயங்கி வருகின்றன. அவற்றிலே மக்கள் சமத்துவம் அனுபவிக்கிருர்கள். அவர்களின்பாஷை, கலாசாரம், பண்பாடுஆதியன மேலும் வளர்ச்சியடைகின்றன.

“ஒரேநாட்டில் புதியஅரசியல்சட்டதிட்டங்கள் ஆக்கப்படும்போது, அன்றேல் ஓர்புதிய அரசாங்கம் பாஷைக்கொள்கைகளை மாற்றஞ் செய்யும்போது அந்நாட்டிலுள்ள பெரும்பான்மைச்சமூகங்கள் பேசிவரும்பாஷைகள் உத்தியோகபாஷைகளாக ஒப்புக்கொள்ளப்படுகின்றன. அந்தப் பாஷைகளுக்குத் தேசிய - உத்தியோக சமஅந்தஸ்துக் கொடுக்கப்படுகிறது. இந்தக்கொள்கையின் அடிப்படையில்தான் பின்லாந்து, பெல்ஜியம், சுவிற்சர்லாந்து, கனடா, தென்னுபிரிக்கா, ருஷியா போன்றநாடுகள் பாஷைப்பிரச்சினையைத் தீர்த்துவைத்தன. ஒவ்வோர் சமூகங்களின் பாஷைகளுக்கும் மேலும்மேலும் சலுகைகளும், அவற்றின்வளர்ச்சிக்கென அதிகவசதிகளும் செய்துவைப்பது, உலகில் இக்காலநடைமுறையாக இருப்பதைக்காணலாம். ஆனல், இலங்கையிலே இதற்குஎதிர்மாருகத் தமிழ்ச் சமூகத்தின் பாஷாஉரிமையைப் பறிப்பதற்குச் சட்டம்ஆக்கப்பட்டிருக்கிறது.

“சுவிற்சர்லாந்திலே நான்குபாஷைகள் உத்தியோகபாஷைகளாக இருந்துவருகின்றன. எனினும் அரசியல்நிர்வாகத்தைப் பொறுத்தவரையிலோ, மற்றும் வேறெந்தத் துறையிலோ அந்நாட்டுமக்களுக்குச் சங்கடம்யாதும் தெரியவில்லை. இவ்வாறே பெல்ஜியம், கனடா, தென்னுபிரிக்கா முதலாம்நாடுகள் இரண்டு பாஷைகளை உத்தியோகபாஷைகளாகக் கொண்டிருக்கின்றன. அவ்வாறே இலங்கையும் தமிழ், சிங்களம் ஆகிய இருபாஷைகளையும் உத்தியோகபாஷைகளாகக்கொண்டு சுமுகமாக இயங்கமுடியும்.

“தமிழ்மொழிக்குத் தேசிய, உத்தியோக அந்தஸ்துக் கொடுப்பதானது, அதைப்பேசுகின்ற மக்களின் சமத்துவத்தை அங்கிகரிப்பதாகும். அங்ஙனம்இல்லையாயின் தமிழ்ப் பேசும்மக்களைக் கீழ்த்தரஅந்தஸ்துக்குத் தாழ்த்துவதாகவேயிருக்கும். தமிழ்ப்பாஷை இழிவானநிலைமைக்கு உள்ளாகவும், அதைப் பேசும் மக்களாகியநாம் கீழ்த்தர அந்தஸ்துள்ள பிரசைகளாகவும் நாம்ஒருபோதும் அனுமதிக்கமுடியாது. இன்னும் ஓர்தமிழ்ச் சர்வகலாசாலை நிறுவவேண்டியதன் அவசியத்தை நான்பலதடவைகளில் வற்புறுத்தியிருக்கிறேன். இந்தக்குறையை நிவிர்த்திசெய்யத் தமிழ்ப்பேசும் மக்கள் உடனடியாக முன்வரவேண்டும்” என்பதே.

இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. சி. வன்னியசிங்கம் அவ்வேளைபேசியதுவருமாறு: சுவாமி தனிநாயகம்அவர்கள் தமிழ்மொழியினதும், தமிழ்க்கலாசாரத்தினதும் பாதுகாவலர் என்றுகூறிஞல் அது மிகையாகாது. அவர் ஓர்சமஷ்டிவாதியாக இராதபோதிலும் கால்பேஸ் மைதானத்தில் நாங்கள் சத்தியாக்கிரகம் நடத்தியபோது, எங்களுக்கு ஆறுதல்கூற அங்குவந்திருந்தார். சிங்களம்இப்போது சட்டபூர்வமாக இந்நாட்டின் தேசியபாஷையாக்கப்பட்டுவிட்டது. ஆயினும், தமிழ்ப் பேசும்மக்களின் போராட்டம் இதனுல்நின்றுவிடப்போவதில்லை. கடைசிவரை தனிச்சிங்களசட்டத்தை நாம் எதிர்த்தேதீரவேண்டும். வெகுவிரைவிலே பாடசாலைகளில் சிங்களம் விரும்பிக்கற்கும் ஓர்பாடமாகவோ, அன்றேல் கட்டாயபாடமாகவோ ஆக்கப்படலாம். எந்தரூபத்தில் வந்தாலும்என்ன, தமிழ்ப் பேசும்மக்கள் அதனைஇறுதிவரை எதிர்க்கவேண்டும்.

சுவாமி தனிநாயகம் அவர்களின் சொற்பொழிவைக்கேட்க மாதோட்டப்பகுதியிலிருந்தும்ஏராளமானேர் சமுகமளித்திருந்தமை இங்கு குறிப்பிடற்பாலதாகும்.

## பத்திரிகைவிற்ற வாலிபன்

“பேப்பர், பேப்பர்” என்று வானதிரக் கூவிக்கொண்டு தெருவிலே பத்திரிகைவிற்றுச் சீவிக்கும் எத்தனையோ ஏழைச்சிறுவர்களைத் தினந்தோறும் நாம்காண்கின்ருேம். இவர்கள் வருங்காலத்தில் விஞ்ஞானிகளாகவும், உயர்ந்த இராசதந்திரிகளாகவும், சிறந்த எழுத்தாளர்களாகவும் ஏன்வரக்கூடாது? இன்று உலகம்போற்றும் எத்தனையோபெரியார்கள் தங்கள்இளமைப்பருவத்தில் இவர்களைப்போன்று ‘பேப்பர்’ விற்றவர்களே. ‘பேப்பர்’விற்றுப் புகழ்எய்திய பெரியார்களில் ஒருவரைப்பற்றிய கட்டுரையேஇதுவாகும்.

“பேப்பர்” “பேப்பர்” “பேப்பர், நியூஸ்பேப்பர்!” வானே அதிரும்படியாகக் கூவிக்கொண்டு அதிகாலையிலேயே ஆறுவயதுகூட நிரம்பாத இச்சிறுவன் சுமக்கமுடியாத ஒருகட்டுச் செய்தித்தாளுடன் தெருவின் குறுக்கிலும், நெடுக்கிலுமாக ஓடியோடிப் பத்திரிகைகள் விற்றுக்கொண்டிருந்தான்.

இச்சிறுவனைப் பார்க்கவே மிகவும் பரிதாபகரமாக இருந்தது. கிழிந்துகந்தலான அவனதுஆடையும், எண்ணெயையே கண்டறியாத அவனது பறட்டைத்தலையும் அவன் ஒருஏழைச்சிறுவன் என்பதை விளம்பரப்படுத்தின.

இவனது நிலைமையைக்கண்டு பரிதாபப்படாதவர்கள் ஒருவருமேயில்லை. ஆனல், அவனுக்குமட்டும் ஒருதிடமான எண்ணம் இருந்தது. “எப்படியாகிலும் செல்வமும், செல்வாக்குமுள்ள பெரியமனிதனுக வேண்டுமென்பதே.” இதையே தனது எதிர்கால வாழ்க்கையின் இலட்சியமாகக்கொண்டு விடாமுயற்சியுடனும், ஊக்கத்துடனும் தனதுவேலையைச் செய்துவந்தான்.

தன்னுடைய எதிர்கால இலட்சியத்தை ஒருசிலசமயங்களில் தனதுநண்பர்களிடம் கூறுவான். ஆனல், அவர்கள் அவனைப் பைத்தியகாரன் என்று சொல்லிஏளனம்செய்வார்கள். இப்படியாக முப்பத்திரண்டுஆண்டுகள் உருண்டோடின. ஒருநாள் ......... அந்நாள் மாட்சிமைதங்கிய பிரித்தானியமன்னரின் பிறந்தபெருநாள்.

இளம்மங்கையர்கள் மயிற்பீலி கொண்டு விசிறிஅழைத்துவர மன்னர் வந்து சிம்மாசனத்தில் அமர்ந்தார். உடனே அன்றுதினம் பிரபுப்பட்டம் பெற்றவர்களின் பெயர்கள்வாசிக்கப்பட்டன. ஒவ்வொருவரும் தத்தம்பெயர் வாசிக்கப்பட்டதும், எழுந்துசென்று மன்னருக்கு மரியாதைசெலுத்தினர். “ஜேம்ஸ் வாட்கின்” என்ற பெயர் வாசிக்கப்பட்டதும், ஒருதடித்தமனிதர் எழுந்துசென்ருர், அம்மனிதர் யார்?

அன்றுதெருவிலே “பேப்பர், பேப்பர்” என்று வானதிரக் கூவித்திரிந்தானே, அதேஏழைச் சிறுவன்தான். அன்று நண்பர்களால் “பைத்தியகாரன்” என்ற பட்டத்தைப்பெற்றவனே இன்று பிரித்தானிய சாம்பிராச்சிய சக்கிரவர்த்தியால் பிரபுஎன்றபட்டத்தைப் பெற்ருன். இன்றுஅவன் பழைய “ஜேம்ஸ் வாட்கின்” அல்ல. “லோட் பீவர்புறுக்.”

பிரபுப்பட்டத்தோடு அவன்நிற்கவில்லை. இரண்டாவது உலகமகாயுத்தத்தில் பிரித்தானிய மந்திரிகளில்ஒருவராகவும் ஆகிவிட்டார். இவற்றைவிட ஆச்சரியத்தைத் தரக்கூடியது என்ன தெரியுமா? அன்றுவீதிகள் தோறும் “பேப்பர், பேப்பர்” என்று வானதிரக் கூவிப் “பேப்பர்” விற்றஅவர் இன்று [illegible]வாய்ந்த “டெய்லி எக்ஸ்பிறஸ்”, “தி சண்டேஎக்ஸ்பிறஸ்” “லண்டன் ஈவினிங்ஸ்ராண்டட்” ஆகிய மூன்றுபத்திரிகைகளையும் தாமேவெளியிடுகின்ருர்.

பிரித்தானிய சாம்பிராச்சியத்திலே பத்திரிகைத்தொழில்உயர்நிலையடைந்ததற்கு மூலகாரணமாக இருந்தவர் “லோட் பீவர்புறுக்” என்று அந்நாட்டுமக்கள் வாயாரப்புகழ்கின்றனர். அன்று பத்திரிகைவிற்றவர் இன்று பத்திரிகைகளின் சொந்தக்காரராகி அவற்றின் உயர்வையும் உகெறியச்செய்து தாமும் புகழேணியின் உச்சியை அடைந்துவிட்டார்.

---

புத்தக மதிப்புரை

## நித்திய சீவியம்

ஆக்கியோன்:

வண. உவி. யேசுதாசன், O. M. I.

விலை ரூபா **2-00**

“ஏகமெய்யான கடவுளாகிய உம்மையும், நீர்அனுப்பியவராகிய யேசுக்கிறீஸ்துவையும், பிதாவிடமிருந்து நான் அனுப்புகிற பரிசுத்த ஆவியையும் அறிந்துகொள்வதே நித்தியசீவியம்” (அரு. XVII, 3; XV. 26; XIV. 17) எனும் திருமொழியாகிய மணிமொழியை விளக்கி இந்நூலின் ஆக்கியோனை சுவாமியவர்கள் எழுதியுள்ள **“நித்திய சீவியம்”** எனும் புத்தகத்தைப்பற்றி நாம் மதிப்புரை ஒன்றை வரையுமுன் பரிமேலர் எஸ். அருளானந்தம் அவர்கள் அதற்குத் தந்தருளிய அருமையான மதிப்புரைக்கு முதலிடங்கொடுத்து அதனை ஈண்டு தருகிரேம்.

“யான் இற்றைவரை வாசித்த தமிழ் விஞ்ஞவிடையான நூல்களுள் தலைசிறந்தது இதுவாகும். வளமிகுந்த இதனை வாசித்ததில், யான் தூயமகிழ்ச்சியுற்றதன்றித் தேவனிடத்தில் கூடுதலான அருளும் பெற்றேன். ஓர் சிறு நூல். ஆயினும் இதன் பொருளடக்கம் — “கடுகைத் துளைத்து...” எனும் திருக்குறட்பண்பினை நினைவுறுத்துகின்றது.

“சமய சித்தாந்தம், மெய்விளக்கத்துறை, திருநூற்றெருகுதிகள் ஆகியாம் அறிவுப்போழியில் பாந்து, விகற்பமுற்ற வாசினையின் பேற்றினை மிகுந்த பொறுமையுடனும், கூடிய உழைப்புடனும் ஒருங்கே திரட்டி, இத்தொகுதியைப் புலமைசான்றதும், பாந்ததும், பலவற்றைஅடக்கி எளிதிற் கிரகித்துக் கொள்ளக் கூடியதுமாய் அமைத்திருத்தலைக் கண்டுள்ளேன். இஃது, தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வோர் கத்தோலிக்க குடும்ப நூல்நிலயத்திலும் அகத்தியமஇருக்கவேண்டிய தொன்ருவதுமன்றி வண. குருப்பிரசாதிகட்கும், உபதேசிகர்க்கும் சமயஅறிவுறுத்தலிற் பெருந்துணை புரிவதுமாகும்.

“இதன் விடயமும், அத்தியாவசிய இவ்விடயம கையாளப்பட்டுள்ள முறையும் கத்தோலிக்கபாடசாலைகளின் ஆசிரியர்கள் ஏழாவது முதல் அதற்குமேற்பட்ட வகுப்புகளில்பாவித்து நற்பயனடையக் கூடியனராயிருக்கின்றனர். கத்தோலிக்க பொதுமக்கட்கு இந்நூல் அறிவானது அறிவுறுத்தற் சுரங்கமாவதுடன், தெய்வீக அருள்பெறும் மார்க்கமுமாகும். களங்கமற்ற நேர்மையுடன் மெய்ப்பொருளைத் தேடச் செய்வதுமாகும்.

“நற்சித்தம்” உள்ள கத்தோலிக்கரல்லாதோருக்கு இப்புத்தகம் மெய்யொளியூட்ட உதவுவதாகும்.

— பரிமேலர் எஸ். அருளானந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தூய கன்னிமை"

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தொட்டிலில் அழுதபொழுது ஓர் கன்னிகையால்பராமரிக்கப்பட்டார். அப்படியாயின் அவர் பரலோகத்தில் மகிமைப்பிரதாபத்தோடு ஆட்சிபுரியும் இவ்வேளையில் தமதுசரீரம் எத்தன்மையோரால் பரிசிக்கப்படவேண்டுமென விரும்புகிறார் என்று நான் உங்களிடம் வினவுகிறேன்" (De Celibatu Sacerdotum C. 3).

(தொடரும்)

## கடன்கொண்டார் நெஞ்சம் ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருகொலைநடந்தது. முக்கால்ரூபா கடன் தராமல் இருந்ததற்காக முந்நூறு ரூபாசெலவுசெய்வதும் உண்டு. வைராக்கியத்திற்காகச் சிலர் இப்படிச்செய்வதுண்டு. வாங்கியகடன் வராவிட்டால் நீதிமன்றத்துக்குச் செல்லாமலே சிலர் விட்டுவிடுவதுமுண்டு. கடன்வாங்கிய சிலர் தவணைசொல்ல அஞ்சமாட்டார்கள். அவர்கள்சொல்லிய தவணைநாளன்று சென்றால் அவர்கள்இருக்கமாட்டார்கள். சிலசமயங்களில் இருப்பர். பலமுறை நடந்துநடந்துதான் அவரிடமிருந்து பணத்தைப்பெறவேண்டும். "பழையபாக்கியைத் தீர்த்துவிடுங்கள்; மறுமுறையும் கடன் கொடுக்கிறேன்" என்று தந்திரமாகச் சொல்லிச் சிலர்தந்திரமாகக் கடனை வசூலிப்பார்கள். பழையபாக்கியைத் தந்துவிட்டுப் புதிதாகக் கணக்குவைத்துக் கொள்ளுகிறேன் என்று நடக்கவைத்தஆசாமி கடன்கேட்பார். உடனே வியாபாரி—"இப்பொழுதெல்லாம் கடன்கொடுப்பதில்லை" என்பார். வந்தவர் உடனேகோபத்தோடு வேறுகடையில் கடன்வாங்குகிறேன்பார் என்று சொல்லி வேகமாகச்சென்றுவிடுவார்.

## கல்லாற்றுக்கடிதம்

**அர்ச். அருளானந்தர் திருநாள் :** கல்லாறு, அர்ச். அருளானந்தர்திருநாள் சென்ற 15-7-56 ஞாயிற்றுக்கிழமை பக்திச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திருநாளுக்கு முதனாள் சனிக்கிழமை மாலை வண. ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமி அவர்கள் அர்ச். அருளானந்தரைப்பற்றி அரியதோர்பிரசங்கம் செய்தார். அதன்மேல் வண. ஜி. ஈ. எல். வம்பேக், வண. ரி. ஆறென்ஸ், வண. ஜே. அலெக்சாண்டர் எனும் குரவர்களால் மாலைஆராதனைபாடியபின் தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. பின்னர் மணிகள் ஆர்ப்பரிக்க, மெழுகுவர்த்திகள் ஏந்தியவண்ணம் பக்தர்கள் பந்திபந்தியாய்ச்செல்ல, அர்ச். அருளானந்தரின் திருச்சுரூபம் மின்சாரவிளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட தேரில்வைத்து ஊர்வலமாகக் கொண்டு போகப்பட்டது. மறுநாள் பங்குக்குரவர் திருநாட் பாடற்பூசை நிறைவேற்றினார். அதன்பின் அருளானந்தரின் திருப்பண்டம் முத்திசெய்யப் பக்தர்களுக்குக் கொடுக்கப்பட்டுத் திருநாள் இனிதே முடிவுற்றது.

— நிருபர்

## சின்னமடு

### திருநாள் நிகழ்ச்சி

4-8-56 சனிக்கிழமை :
மாலை 7-45 மணிக்கு மலை ஆராதனை.
5-8-56 ஞாயிற்றுக்கிழமை :
காலை 5 மணிதொடக்கம் திவ்வியபூசை
„ 7 மணிகுகுப் பாடற்பூசை
„ 8 மணிக்கு திருச்சுரூப சுற்றுப் பிரகாரம்.

**கட்டளைக் குரவர்**
சின்னமடு, சாவணை, வேலணை.
19-7-56.



## JAFFNA MUNICIPAL COUNCIL

**Supplementary Budget No. 1 of 1956**

NOTICE is hereby given in terms of section 214 (2) (b) of the Municipal Councils Ordinance No. 29 of 1947 that Supplementary Budget No. 1 of the Jaffna Municipal Council, for the year 1956 will be open to public inspection at the Municipal Office for seven days from 21st July, 1956.

S. S. NAVARATNAM,
Mayor,
Jaffna Municipal Council.

Municipal Office,
Jaffna, July 14th, 1956.

**"Welmar" "Broadwood"**
**PIANOFORTES**
Also
**Baby Organs, and Transposing Reed Organs, available.**
**WELMAR PIANO AND IMPERIAL ORGAN AGENCY,**
**171, St. James' Street, Mutwal, COLOMBO 15.**
Telegrams : **"PETTIFLEUR" COLOMBO.**


## புதுமைமாதா கோவில் கிறீஸ்துவர்களும் யூபிலிநாயகரும்

யாழ்ப்பாணம், பரிசுத்த புதுமைமாதா கோவிலிலே சனிவாரந்தோறும் பக்தியருட்சியாக நடைபெற்றுவரும் பாத்திமாமாதா செபமாலைப்பக்திமுயற்சி சென்ற 14-7-56 சனிக்கிழமை மாலை வழமைபோல் நடந்து, சற்பிரசாதஆசீர்வாதம் அருளப்பட்டதும், அக்கோவிற்கிறீஸ்துவர்கள் தங்கள்கட்டளைக்குரவர் அதிவண. எமில் பொமிக்கோ சுவாமியவர்களின் குருத்துவ வெள்ளிபொன்யூபிலியைக் கொண்டாடுமுகமாக ஒன்றுசேர்ந்து, அவரைக்குருமனையின்பக்கமாக அமைந்துள்ள மைதானத்தில் அமைக்கப்பெற்று மின்சாரதீபங்களாலும், துவசதோரணங்களாலும் அலங்காரகாட்சி அளித்து நின்ற அழகியபந்தருக்கு அழைத்துச்சென்று, மாலைகள்சூட்டி, மங்கலகரமாக வரவேற்று, அன்பளிப்புகள்வழங்கி நின்றார்கள்.

யூபிலிநாயகர் உயர்மேடையில் எழுந்தருளியதும் சக்கிறிஸ்தாம் திரு. வ. கிளமென்றஎன்பவர் விசித்திரவேலைப்பாடமைந்த யூபிலிச்சோபனப்பத்திரம் படித்துக்கொடுத்தார். அதைத் தொடர்ந்து திரு. [illegible] மருதஇளைஞர் [illegible] திரு. வ. அலெக்சாந்தர் என்பவர்கள் பேசியபோது: யூபிலிநாயகர் தங்கள் சமூகத்துக்கும், ஆலயத்துக்கும் ஆற்றியுள்ள அருஞ்சேவைகளை விதந்து பாராட்டி, அவைகளைத் தாங்கள்உள்ளநாள்வரை மறக்கவோ, அன்றேல் மழுக்கவோ முடியாதென்றும், அவற்றிற்கெல்லாம் ஆனைகைம்மாறு பொன்னும், மணியும், புகழ்மாலைகளுமல்ல, ஆனால், அவரதுபொன்னான புத்திபோதனைகளை நன்மனதாகக்கேட்டு, அவர் மனம்நோகாமல் நடப்பதேயென்றும், மற்றெந்தவிதத்திலும் பிரதிநன்றிசெய்ய முடியாதென்றும் தெரிவித்து யூபிலிச்சோபனம் கூறினார்கள்.

யூபிலிநாயகர் அளித்த பதிலிலே: நீங்கள் அளித்த இன்பமானவரவேற்பு என்னைப்பேரின்பக்கடலில் ஆழ்த்தியுள்ளது; அதற்காக நன்றிதெரிவித்துக் கொள்ளுகிறேன்; இற்றைக்கு 22 வருடங்களின்முன் ஆடி மாதம் 14-ந் திகதியாகிய இன்றுதினம்— அதாவது, 1934-ம் ஆண்டு ஆடிமாகம் 14-ந்திகதியாகிய இன்றுதினம இதேவேளையில் தான் போலாந்திலே எனது சொந்த ஊரில் எனக்கு ஓர்பெருங்கொண்டாட்டம் நடத்தப்பட்டது; நான் எனது சொந்தஊரையும், பெற்றார், சகோதரர், சகோதரிகள், சுற்றத்தவர்கள், மற்றும் ஊரவர்களையெல்லாம் விட்டுப்பிரிந்து இலங்கைக்குப் பிரயாணமான போது செய்யப்பட்ட பிரியாவிடைக் கொண்டாட்டம் அதுவாகும்; அங்கு போலும் அழகானகுதிரைகள் இங்கேயில்லை; அத்துடன் பெருந்தொகையாகவுமில்லை; அப்போது எனது இனசனரும், சிநேகிதரும், ஊரவரும் 300 குதிரைகளில் என்னைப்புடைசூழ்ந்து எனதுஊரிலிருந்து நான்குமைல்தூரத்திலுள்ள றெயில்வே ஸ்றேஷனுக்கு என்னை அழைத்துவந்து மிகுந்தகவலையுடனும், கண்ணீருடனும் பயணமனுப்பி வைத்தார்கள்; அன்று ஓர்பெருந்துக்கநாளாய்இருந்தது; ஆனால், ஆடிமாதம் 14-ந் திகதியாகிய இன்றுதினம் ஓர்பெருஞ் சந்தோஷநாளாய் இருக்கிறது; அதனால் இன்றுதினம் நீங்கள் எனது யூபிலிவிழாவைக் கொண்டாடக் கிடைத்தது உங்கள் அதிர்ஷ்டமாகும்; நீங்கள் இன்றுபோல என்றும் ஒற்றுமையோடும், தேவபக்தியோடும் வாழவேண்டுமென ஆசிக்கிறேன்; நான்ஒரு குருவானவர்; ஆயினும், ஒரு மனிதர் தான்; ஆதலால் நான் பிழைகள்செய்யலாம்; அவைகளையெல்லாம் மன்னித்து, நான் இன்னும் நெடுங்காலம் எனது குருத்துவதொண்டைக் குறையில்லாமல் நடத்திவரும்படியாக நல்ல சுகபலத்துடன் இருக்கவேண்டுமென மன்றாடிக் கொள்ளுங்களெனக் கூறி முடித்தார்.

ஈற்றில், திரு. எம். கோர்னேலியுஸ் என்பவர் சமுகந்தந்த அனைவர்க்கும் நன்றிதெரிவித்தார். சுவாமிகளின் ஆசீர்வாதத்தோடும், தேநீர்உபசாரணையோடும் விழா இனிதே நிறைவாயிற்று.

— நிருபர்

❊ தாயும், மகளுமான அர்ச்சியசிட்டர்கள் யார்?

சுவீடன்நாட்டு அர்ச். பிறிசித்தம்மாளும், சுவீடன்நாட்டு அர்ச். கத்தரீன் அம்மாளுமே.

## நானா சங்கதிகள்

● ரோமைமாநகருக்குச் சமீபமான பியூமிசினோ எனுமிடத்தில் நடந்தேறிய சர்வதேச ஆகாயவிமான சம்பந்தமானகாட்சியில் கலந்துகொண்ட 150 ஆகாயவிமானிகளுக்கும், 70 பரஷூட் விமானிகளுக்கும் பாப்பரசர் பேட்டியளிக்கலாயினர். அதற்குமுன் உணவுப்பொருட்களைப் பங்கிடுசெய்வதான சர்வதேசசங்க மகாநாட்டிற் சமுகமளித்திருந்த 31 நாடுகளைச்சேர்ந்த பிரதிநிதிகள் அவரின் பேட்டிபெற்றுக் கொண்டார்கள்.

● ஐக்கிய அமெரிக்கதேசத்திலே 561 கத்தோலிக்க பத்திரிகைகளும், மற்றும சஞ்சிகைகளும் பிரசுரமாகின்றன. சென்றவருடத்திலே இவைகள் 2 கோடியே 26 லட்சத்து 69 ஆயிரத்து 394 பிரதிகளை வெளியிட்டிருக்கின்றன. இத்தொகை முந்தியவருடத்தைக்காட்டிலும் 15 லட்சம் பிரதிகளால் அதிகரித்துள்ளது. கனடாதேசத்தில் 33 கத்தோலிச்க பத்திரிகைகளும், மற்றுப்சஞ்சிகைகளும் பிரசுரமாகியிருக்கின்றன.

● அயர்என அறியப்படுகின்ற சுதந்திர அயர்லாந்திலே சென்றஆனிமாதத்திலே ஓர் ஞாயிற்றுக்கிழமை வேறுவேறாக மூன்றுஇடங்களில் நடைபெற்ற குருத்துவாபிஷேக திருவைபவங்களில் 103 குருத்துவமாணவர் குருப்பட்டம் அருளப்பெற்றிருக்கிறார்கள். இவர்களில் 61 பேர் மைக்குவேயிட் அதிமேற்றிராணியாராலும், 32 பேர் ஓ' றெய்லி மேற்றிராணியாராலும், 10 பேர் கோகலன் மேற்றிராணியாராலும் அபிஷேகஞ்செய்யப் பெற்றார்கள்.

● ஓர்புறொட்டஸ்தாந்த நாடாகிய சுவீடனிலும் கத்தோலிக்கசமயம் இப்போது மறுமலர்ச்சிஅடைந்துவருகின்றது. சமீபத்திலே அங்கு ஹாம்ஸ்ராட் நகரில் தம திரித்துவத்தின்பேரால் கட்டப்பெற்ற புதிய சிற்றாலயம்ஒன்று ஸ்ரொக்கோம்நகர் மேற்றிராணியாரால் ஆசீர்வதிக்கப்படலாயிற்று. இத்துடன் அந்நாட்டில் தற்போது 10 கத்தோலிக்க சிற்றாலயங்களும், 17 கோவில்களும் இருக்கின்றன.

● சோவியற் ரூஷியாவின் குடியேற்றகம்மிற்றியானது எஸ்தோனியா, லாத்வியா, லிதுவானியா முதலாம் நாடுகளிலிருந்து ஒருலட்சம்மக்களைச் சனநெருக்கமில்லாத ரூஷியாவின்பகுதிகளில்குடியேற்றிவைக்கத் திட்டமிடுவதாய் மூனிச்நகரில் வெளியாகும் ஜேர்மன் தினசரிப் பத்திரிகைஒன்று அறிக்கையிட்டிருக்கிறது. பால்த்திக் நாடுகளிலுள்ள மக்களை நிரந்தரமாக அழித்துவிடுதற்கான ஓர் சூழ்ச்சியே இந்தக்கம்யூனிஸ்த திட்டமென்று அப்பத்திரிகை கூறுகின்றது.

● ஸ்பானிய உள்நாட்டு யுத்தம் நடந்தகாலத்திலே செம்படைகளால் அநியாயமாகக் கொலையுண்டு வேதசாட்சிகளான வலென்சியா அதிமேற்றிராசனத்தைச்சேர்ந்த 19 பெண்மணிகளுக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்படும்விஷயமாய் அறிக்கைஒன்றைத் திருச்சடங்காசார திருச்சங்கத்துக்குச் சமர்ப்பிக்குமாறு ஸ்பானிய கத்தோலிக்கசேவா சங்கத்தைச் சேர்ந்த மாதர்களின் குழுஒன்று ரோமாபுரிபோய்ச் சேர்ந்திருக்கிறது.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, July 19 1956.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org